Registered No. M-4483 Madras War Review (TAMIL) 9-6-1944

யுத்த சந்திரிகை

மலர் IV 1944-ம௵ ஜூன்மீ 9உ, வெள்ளிக்கிழமை இதழ் 40

இந்தப் புதிய மாபெரும் போர் முனை

இந்தச் சபையோருக்கு நான் ஒரு விஷயம் அறிவிக்க வேண்டி யிருக்கிறது. நேற்றிரவும் இன்று அதிகாலையிலும் அடுத்தடுத்துப் பல படைகள் முதன் முதலாக ஐரோப்பாக் கண்டத்தில் போய் இறங்கிவிட்டன. இதில் மீட்சித் தாக்குதல் பிரஞ்சுக் கரையின் மீது தான் நேர்ந்தது.

இது வரை எல்லாம் திட்டப்படியே நடக்கின்றன வென்று அங்கே ஈடுபட்டிருக்கும் படைத் தலைவர்கள் அறிவிக்கிறார்கள். அதுவும் எப்படிப்பட்ட திட்டம்! இந்தப் பரந்த திட்டம் உண்மையிலேயே மகா சிக்கலானது. இவ்வளவு கஷ்டமான சம்பவங்கள் ஒரு போதும் நடந்ததே கிடையாது. அலைகளின் வேகமும் தணிவும், காற்றும், ஆகாயத்திலிருந்தும் கடல் மீதிருந்தும் பார்க்கும் போது தெளிவாகத் தெரிதலும், மகா நெருங்கிய தொடர்போடு தரைப் படையும் விமானப் படையும் கடற் படையும் ஒன்று படப் பயன் படுத்துதல் முதலியவை இத்திட்டத்துற் குட்படும். அன்றியும் நிலைமை எப்படிப் பட்டது என்று முழுவதும் தெரிந்து கொள்ள முடியாத பருவத்தில் தான், இத்தனையும் நடக்க வேண்டி யிருக்கிறது.

நமது போர்த் தந்திர முறையைக் கொண்டு எதிரிகள் திடுக்கிடும்படி செய்து விட்டோம் என்னும் நம்பிக்கை ஏற்கெனவே நமக்கு ஏற்பட்டு விட்டது. இந்தப் போராட்டம் நடைபெறும் போதே திடுக்கிடத் தக்க பல சம்பவங்களை எதிரிகளுக்கு நாம் உண்டாக்குவோமென்று நம்புகிறோம். இப்போது ஆரம்பமாகியிருக்கும் போராட்டம், அளவிலும் வேகத்திலும் இன்னும் பல வாரங்கள் வரை அதிகப்பட்டுக் கொண்டே யிருக்கும். அதன் போக்கு எப்படி யிருக்கும் என்பதைப் பற்றி நாம் இப்போது ஹேஷ்யங்கள் எதுவும் சொல்லுவதற்கில்லை. ஆனால் பரிபூரண ஒற்றுமை நம்மவர்களுக்குள் நிலவுகிறது என்று மட்டும் நான் சொல்லுவேன்.

மிஸ்டர் சர்ச்சில்

சென்ற சில நாட்களாகக் கப்பல் ஏறிக் கொண்டிருந்த படைகளை நான் பார்வையிட்டபோது, அவர்களுடைய உணர்ச்சியும் ஊக்கமும் மிகத் தலை சிறந்து விளங்கின. வசதிப் பொருட்கள், அறிவுத் துறை, முன் யோசனை ஆகியவைகளால் ஆகக் கூடிய எதுவும் அலட்சியம் செய்யப்படவில்லை. இந்தப் புதிய பெரும் போர் முனையை ஆரம்பிக்கும் எல்லா வேலைகளையும், படைத் தலைவர்களும் அவர்களை ஊழியர்களாகக் கொண்டுள்ள அமெரிக்க அரசாங்கத்தினரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தினரும், பூரண மன உறுதியோடு தொடர்ந்து நடத்துவார்கள்.

—மிஸ்டர் சர்ச்சில், காமன்ஸ் சபையில்
ஜூன் மாதம் 6-ம் தேதி விடுத்த விசேஷ அறிக்கை.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : மிஸ்டர் சர்ச்சில்	1	இஸ்லாமிய நாடுகள் மீது அச்சு அரசாங்கங்களின் கண்ணோட்டம்	5
இந்தப் புதிய மா பெரும் போர் முனை	1	ஹிட்லர் விரும்பாத செய்திகள்	7
கொஹிமாவில் சென்னைப் படைகளின் சிறந்த தொண்டு	2	தென்னிந்தியாவின் இணையற்ற சிறப்பு	8
கையால் எதிரி ஈட்டிக் குத்துகளைத் தடுத்தார்	2	போர் முயற்சியும் அதன் எதிரிகளும்	9
தலையங்கம் : ஐரோப்பியப் படையெடுப்பு	3	வந்தே விட்டது	11
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	யுத்த நாட் குறிப்புக்கள்	12
வானொலி நாட் குறிப்புக்கள்	4	இந்தியக் கப்பற் படைப் பரீட்சை	12

கொஹிமாவில் சென்னைப் படைகளின் சிறந்த தொண்டு

ஒரு இந்திய இராணுவக் கண்ணோட்டக்காரர் கொஹிமாவிலிருந்து கீழ்க் கண்டவாறு எழுதுகிறார் :—

இந்தப் போர்முனையில், அஸ்ஸாமிலுள்ள ஜன சஞ்சார மில்லாத இடங்களிலிருக்கும் விமானக் கூடங்களில் விமான எதிர்ப்பு பீரங்கிகளை அமைத்திருக்கிறார்கள். அவற்றை சென்னைப் படையினர் கையாளுகிறார்கள். கடுமையான காட்டின் வழியாகக் காலாட் படைகளைக் கொண்டுபோய் ஜப்பானியர் முன் நிறுத்துவதற்கு 'புல்டோசர்' வண்டிகளை சென்னைப் படையினர் ஓட்டிக்கொண்டு போகிறார்கள். இப்படிப்பட்ட நூற்றுக் கணக்கான வேலைகளை அவர்கள் செய்து முடிக்கிறார்கள்.

சேலம் ஜில்லாவிலே 18 மாதங்களுக்கு முன்பு பீடி சுற்றிக்கொண்டிருந்த சோட்டா ஜான், இப்போது லான்ஸ் நாயிக் பதவியிலிருக்கிறார். விமான எதிர்ப்புப் பீரங்கிகளைக் கையாளுவதில் மிகவும் கெட்டிக்காரர் ஆகி விட்டார். இவர் சேர்ந்திருக்கும் படையிலுள்ள அனைவரும் சென்னைக்காரர்களே. சஸ்ஸெக்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த ஹாயி என்னும் ஊரரான சார்ஜெண்ட் டபுள்யு. எஸ். வாஷர் இவர்களைக் குறித்துக் கூறியதாவது :—

"இந்த சென்னை வாசிகளான பீரங்கிக்காரர்களே நான் பார்த்துள்ள எல்லாரையும் விட, மகா கெட்டிக்காரர்கள்."

சார்ஜெண்ட் வாஷருக்கு இவர்களைக் குறித்துத் தெரிந்திருக்க வேண்டும். ஏனென்றால் அவர் பிரிட்டன் போர் நடந்த காலமெல்லாம் விமான எதிர்ப்புப் பீரங்கிக்காரராகவேதான் இருந்தவர்.

எல்லா விடங்களிலும் சென்னைக்காரர்கள் தம் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். விசேஷ வேலைகள் பலவற்றையும் அவர்கள் செய்கிறார்கள் கோயமுத்தூரைச் சேர்ந்த லான்ஸ் நாயிக் பிடாரிக் கவுண்டர் மின்சார விசைப் பலகையைக் கையாளுகிறார். சென்னை நகரவாசியான பிட்டர் பி.என். நாயுடு மின்சார இயந்திரங்களைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறார். என்னுடைய சிறிய 'ஜீப்' மோட்டாரை ஓட்டுகிறவர் குண்டூரைச் சேர்ந்த ஆபிரகாம்; மதுரையைச் சேர்ந்த பிச்சை ஒரு பெரிய 'புல்டோசர்' மோட்டாரை ஓட்டுகிறார். எல்லா வகை வண்டிகளையும் நூற்றுக்கணக்காண டிரைவர்கள் ஓட்டுகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் கொஹிமாவிலிருந்து கொண்டு தம்மை விடப் பலமான படைகளோடு வந்து தாக்கின ஜப்பானியர்கள் தாக்குதல்களை 13 நாட்கள் வரைச் சமாளித்துக் கொண்டிருந்தவர்கள். அதற்குப் பிறகு தான் அவர்களுக்கு உதவி வந்து சேர்ந்தது. அவர்கள் அங்கே செய்த அருமையான வேலையைப் பாராட்டி ஒரு கர்னல் அவர்களுக்கு நன்றி கூறினார்.

கையால் எதிரி ஈட்டிக் குத்துக்களைத் தடுத்தார்

சுபேதார் சிதம்பரத்தின் அருஞ் செயல்

இம்பால் போர் முனை. காலை 3-மணியிருக்கும். பலேலுக்கு அருகிலுள்ள நம் வெளி அரண்களுக்குள் புக வேண்டி, சமயத்தை எதிர் நோக்கி ஒரு ஜப்பானியப் படைப் பகுதிப் பதுங்கி யிருந்தது. இவர்கள் பதுங்கி யிருப்பதை, வேவு பார்க்கச் சென்றதோர் கூர்க்க படையினர் கண்டு கொண்டனர். உடனே அவர்களை வளைத்துக் கொண்டு, அவர்கள் பதுங்கி யிருந்த புதருக்குத் தீமூட்டி விட்டனர். தப்ப வழியில்லாமல் அந்த ஜப்பானியப் படைத் தலைவரும் அவருடைய கையாளும் தற்கொலை செய்து கொண்டார்கள். இந்தச் சத்தத்தைக் கேட்ட சுபேதார் சிதம்பரம் துடித்தெழுந்தார். தன் காவற் கட்டங்களையெல்லாம் பார்வையிடக் கிளம்பினார். ஒரு காவற் கட்டத்திற்கு 10 கஜ தூரத்திற் கப்பால் அவர் கண்டதென்ன? காவற் கட்டத்திற்கும், கூர்க்கப் படையினருக்கும் இடையே மூன்று மூன்று பேர்களாகப் படையினர் அணியில் வந்து சேருவதைக் கண்டார். இருள் மிகுதியாயிருந்ததனால், அவர்கள் நேச நாட்டுப் படையினரா அன்றி எதிரிப் படையினரா என்று நிர்ணயிக்கக் கூடவில்லை. ஆகவே, அவர்களைக் கூவி 'நீங்கள் யார் ? உங்கள் குறிவார்த்தை' என்ன ? வென்று கேட்டார். 'டீக் ஹை சாஹிப்' (எல்லாம் சரியாக இருக்கின்றது) என்னும் பதில் கிடைத்தது.

ஒரு விநாடி கழிந்தது. அம் மூவரும் தம் ஈட்டிகளைக் கொண்டு சுபேதாரைத் தாக்க விரைந்து வந்தனர். தன் கைகளைக் கொண்டே சுபேதார் சிதம்பரம் அவற்றைத் தடுத்தார். கடைசியில் காயப் பட்டு கீழே விழுந்தார். அவருடைய கையாளை எதிரிகள் கழுத்தை நெரித்து வாயைப் பொத்தி அவர் வசமிருந்த துப்பாக்கியையும் பறித்துக் கொண்டு இழுத்துக் கொண்டு போனார்கள். ஆனால், நம் காவற் கட்டங்களிலிருந்தவர்கள் மிகவும் எச்சரிக்கையாயிருந்து, எதிரிகளை நோக்கிச் சுட்டார்கள். ஜப்பானியப் படையினர் சிதறியோடினார்கள். சுபேதார் தன் பாசறைக்குத் திரும்பி வர முடிந்தது.

இந்த சுபேதார் சிதம்பரம் வடாற்காடு ஆரணி ஜாகிரைச் சேர்ந்தவர். இவருடைய கையாளான சிப்பாய் வன்னையா கிருஷ்ணா ஜில்லாவைச் சேர்ந்தவர். நம் காவற் கட்டத்திலிருந்தவர்கள் எதிரிகளைச் சுட்டபோது, சிப்பாய் வன்னையாவையும் பற்றிக் கொண்டு எதிரிப் படைகள் ஓடக் கூடவில்லை. அந்தச் சமயத்தில், அந்தக் காட்டிலுள்ள ஒற்றையடிப் பாதையினின்று கீழே யுள்ள ரோட்டில் அவர் குதித்தார். அங்கிருந்த கூர்க்கப் படையினர் அவரைப் பராமரித்தனர். அவர் குதித்த போது, அவரது கணுக்கால் மட்டும் சுளுக்கிக் கொண்டது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV 1944-ம் ௵ ஜூன் ௴ 9 ௳, வெள்ளிக்கிழமை இதழ் 40

ஐரோப்பிய படை எடுப்பு

ஜூன் ௴ 5 ௳ உலக சரித்திரத்தில், அதுவும், இரண்டாவது மஹா யுத்தத்தின் போக்கில் ஒரு முக்கிய நாள். அச்சு நாடுகளின் தலை நகரங்கள் முறையே பர்லின், டோக்கியோ, ரோமாபுரி. முஸோலினி ஏதேச்சாதிகாரத்திற்குச் சுமார் 20 வருஷங்கள் தலைமை ஸ்தானமாக இருந்த ரோமாபுரி ஜூன் ௴ 5 ௳ நேசத் துருப்புகளால் கைப்பற்றப்பட்டது. இத்தாலியப் போரில் இது ஒரு முக்கிய கட்டமாகும். மகத்தான வெற்றிகளில் இது குறிப்பிடத் தக்கது. மந்த நிலையே பரவி இருந்த இத்தாலியப் போரில், மே ௴ 11 ௳ யிலிருந்து ஒரு விறுவிறுப்பு ஏற்பட்டு, பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் கூறியது போல், ஜெனரல் அலக்சாந்தர், ஜெனரல் க்ளார்க், ஜெனரல் லீஸ் இவர்களது தலைமையில் நேச தேசப் படைகள் ஒரு கீர்த்தி மிக்க காரியத்தைச் சாதித்து விட்டன. சென்ற ஐந்து மாதங்களாக இத்தாலியில் நடை பெற்று வந்த தீவிரமான சண்டைக்கு இது சரியான சன்மானம் தான். இதன் மூலம் இத்தாலியின் பாதிப் பகுதி நேச நாட்டினர் கைவசப்பட்டு விட்டது என்று கூறலாம். பாஸிஸத்துக்கு பக்க பலமாயிருந்து வந்த விக்டர் இமானுவல் மன்னரும் முடி துறந்தார். அவருக்கு ஆதரவாயிருந்த மார்ஷல் படோக்லியோவும் ஜனப் பிரதி நிதித்துவம் வாய்ந்த மந்திரி சபையை அமைக்கப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார். இந்த லட்சியம் வெற்றி யடைந்து வருகிறது.

ஆனால், இது இத்தாலியப் போரின் இறுதிக் கட்டமல்லவென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் வட இத்தாலியில் மார்ஷல் கெஸல்ரிங் கடும் போருக்குத் தயார் செய்து கொண்டிருக்கிறார். அப்பினைன் மலைத் தொடரும், அதற்கு வடக்கேயுள்ள போ நதியும் எதிரிகளுக்குப் போராட வசதிகள் அளிக்கக் கூடியவை. எனவே மேற் கொண்டும் கஷ்டமான கட்டங்கள் தாண்ட வேண்டியிருக்கின்றன. எனினும் பூரண வெற்றி நிச்சயம். எதிரி பலம் குறைய ஆரம்பித்து விட்டது. நமது பலம், தரையிலும் கடலிலும், ஆகாயத்திலும் வலுத்து விட்டது.

ரோமாபுரி வீழ்ச்சியினால் உண்டாகும் முழு சந்தோஷத்தையும் அனுபவிக்கு முன், அதைவிட உலக மக்களுக்குப் பேரானந்தம் விளைவிக்கக் கூடிய செய்தி மறு நாள் ஜூன் ௴ 6 ௳ வெளியாயிற்று. இந்த நாள், மனித வாழ்க்கையிலேயே வெகு புனிதமான நன்னாளாகும். ஏன்? ஹிட்லரின் ஐரோப்பியக் கோட்டையைத் தகர்க்கும் 'இரண்டாம் போர் முனை' ஐரோப்பிய படை யெடுப்பு அன்று காலையிலேயே ஆரம்பமாகி விட்டது. வெகு ஆவலாக எதிர் பார்த்த படை யெடுப்பு துவங்கி விட்டது. பிரான்ஸின் வட கரையில் ஸீன் நதி முகத்துவாரத்தில் நேச தேசப் படைகள் இறங்கின. பல கடற் கரை நகரங்களில் நம் படைகள் புகுந்து மேற் கொண்டு முன்னேறி வருகின்றன. குறிப்பாக கேய்ன், செர்பரோ, அரோமஞ்சி, கொர்ஸி, ஜெர்ஸியைக் கூறலாம்.

இந்தப் படை யெடுப்பின் போக்கைப் பற்றிக் காமன்ஸில் ஜூன் 6 ௳ மிஸ்டர் சர்ச்சில் கூறியிருப்பதாவது:—"இந்தப் போர் நடவடிக்கைகள் மிக்கத் திருப்திகரமான முறையில் நடை பெற்று வருகின்றன. நேற்றிரவு பிரமாதமாகத் தோன்றிய பல அபாயங்களையும், கஷ்டங்களையும் நாம் கடந்து விட்டோம். நாம் எதிர் பார்த்ததை விடக் குறைவான நஷ்டத்துடன் கடலைக் கடந்து விட்டோம். நமது விமானப் படைகளின் குண்டு மாரியினாலும், நமது கப்பல்களிலுள்ள சிறந்த பீரங்கிகளின் உயர்ந்த குண்டுப் பிரயோகத்தினாலும், எதிரி பீரங்கிகளது எதிர்ப்பை வெகுவாக பலவீனப் படுத்தி விட்டோம். அகண்ட போர் முனையில் நேசப் படைகளை இறக்கினோம். சில இடங்களில் நமது படைகள் பல மைல்கள் தூரம் ஊடுருவிச் சென்றிருக்கின்றன. இதற்கு முன் கண்டிராத அவ்வளவு அதிகமான பாரச்சூட் படைகளை இறக்கி இருக்கிறோம். இந்தக் காரியத்தை மிகச் சொற்ப நஷ்டத்துடன் இலக்குத் தப்பாத வழியில் செய்து முடித்திருக்கிறோம். விமானம் மூலம் சென்ற துருப்புகள், வேரூன்றிக் கொண்டுவிட்டன. படையை இறக்கி மேலே தொடர்ந்து முன்னேறும் வேலை, நாம் எதிர் பார்த்ததைவிட மிகக் குறைவான நஷ்டத்துடன் நடந்திருக்கிறது. பல விடங்களில் போர் நடை பெறுகிறது. பல முக்கியமான பாலங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன."

மேலும் பிரதம மந்திரி சர்ச்சில் பேசுகையில் "இது வரை எதிர்பார்த்தபடியும் திட்டப்படியுமே காரியங்கள் நடந்து வருகின்றன. நமது ராணுவ தந்திரத்தைக் கண்டு எதிரிகள் பிரமிக்கும்படி செய்ய முடியுமென்று நம்பினோம். இந்த நம்பிக்கை கைகூடிவிட்டது. போர் நடை பெறுகையில் விரோதிகளுக்கு ஒன்றன்பின் ஒன்றாக பல பிரமிப்புகளையும், திகைப்புகளையும் உண்டாக்க முடியுமென நம்புகிறோம். தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்போராட்டம் அளவிலும், ஊக்கத்திலும் பெருகிக்கொண்டே போகும். இதன் போக்கு எப்படி இருக்குமென்பதைப் பற்றி ஹேஷ்யங்கள் கூற நாங்கள் முயற்சி எதுவும் செய்யமாட்டோம். ஆனால், ஒன்று மாத்திரம் நான் சொல்லுவேன். நேசதேசத்தினருள் பூரணமாக ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. நேசதேசப் படைகளுக்குள் எங்கும் சகோதரத்துவ உணர்ச்சி காணப்படுகிறது. சுப்ரீம் கமாண்டரான ஜெனரல் ஐஸன்ஹோவரிடமும், அவரது சஹாக்களிடமும், படையெடுத்துச் சென்றுள்ள படையின் சேனாதிபதியான ஜெனரல் மாண்ட்கோமரியிடமும் பூரண நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. சென்ற சில தினங்களில் கப்பலேறிக் கொண்டிருந்த துருப்புகளை நான் நேரில் பார்த்தேன். அவர்களது உற்சாகம் மெச்சத்தக்கதா யிருந்தது. இந்தப் போராட்ட ஏற்பாட்டில், தளவாட சாஸ்திர ஞானம், முன் யோசனை, முதலிய விஷயங்களில் கவனமாகவே இருந்திருக்கிறோம்" என்று சொல்லியிருப்பது கவனிக்கத் தக்கது.

இது சமயம் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் மக்களுக்கு விடுத்துள்ள செய்தியை ஈண்டு தருகிறோம்: "மறுபடியும் நாம் சோதனைக்குள் ளாக்கப்பட்டிருக்கிறோம். இப்போது நாம் உயிர் தப்பப் போராடவில்லை. ஆனால் உயர்ந்த லட்சியம் வெற்றி பெறும் காரியத்துக்காகவே யுத்தம் புரிகிறோம், நம் தைரியமும் திடமும் மட்டுமே இப்போது போதாது; உணர்ச்சி அதிகரிக்கவேண்டும்; வெற்றியடையக் கங்கணம் கட்டிக் கொள்ளவேண்டும். ஐந்து வருஷங்களாகக் கஷ்டப்பட்டும் நாம், யுத்தத்தில் இறங்கும்போது காட்டிய உற்சாகத்தை மீண்டும் காட்டவேண்டும்.

ஆரம்ப வெற்றிகளையும், முன்னேற்றத்தையும் கவனிக்கும் போது, இறுதி வெற்றியும் நேசதேசத்தினருக்குத் தான் என்பதற்குச் சந்தேகமில்லை, மத்தியில் ஏற்படும் சங்கடங்களை எதிர்த்துப் பூரண வெற்றியை ஐரோப்பாவில் கூடிய விரைவில் நேச நாட்டினர் நிலை நாட்டுவார்கள் என்று நம்புகிறோம்."

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

பர்மா நிலைமை: திருப்திகரமான பலன்கள்.

சென்ற திங்கட்கிழமை நியூ டில்லியில் ஒரு இராணுவப் பிரசங்கியார் பர்மா போர் முனையிலுள்ள நிலைமையைக் குறித்து பத்திரிகை காரர்களிடம் கூறியதாவது:—

" மொத்தத்தில், பர்மாவில் ஜப்பானியர்களோடு நாம் சமமான நிலைமையில், முதன் முதல், இப்போது போராடுவதாகத் தெரிகிறது. அவர்களுடைய கையிருப்பு எவ்வளவு என்றும் நாம் தெரிந்து கொண்டோம். வங்காளக்குடாக் கடலிலோ, இந்து மகா சமுத்திரத்திலோ நம்மை அவர்கள் எதிர்க்க வில்லை. விமான பலத்திலும் நாம் ஆதிக்கம் பெற்றிருக்கிறோம். தரைப் போர்களில் தாம் வெற்றி பெறுவதாக எதிரிகள் காட்டிக் கொள்ளுகிறார்கள். உண்மையில் நிலைமை தலைகீழப் பாடந்தான். நாம் பெருமிதமா யிருக்கக் கூடாது; என்றாலும் பலாபலன்கள் திருப்திகரமாகத் தான் இருக்கின்றன."

மழை காலம் ஆரம்ப மாகு முன்பு இம்பால் சம வெளியைக் கைப் பற்றி விட வேண்டும் என்னும் நோக்கத்தோடு, பர்மா போர் முனையில் இம்பாலுக்குத் தெற்கேயும், தென் கிழக்கேயும் மகா கடுமையாக ஜப்பானியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக தாமு, பலேல், பிஷென்பூர் பகுதிகளில் இது வெகு தெளிவாகத் தெரிந்தது. அவர்கள் கண்போட்டிருந்த இம்பால் சமவெளியைக் கைப்பற்ற செய்த அதி தீவிர முயற்சிகள் பலிக்க வில்லை தாக்கிய போதெல்லாம் அவர்கள் விரட்டி யடிக்கப் பட்டனர். இதைக் கொண்டு ஜப்பானியர்கள் தம் பலத்தை இங்கே அதிகப்படுத்திக் கொள்ள முடியாது என்றும் நினைத்து விடக் கூடாது. ஏனென்றால் தாமு ரோட் வழியாக எல்லாப் பருவங்களிலும் சப்ளைகள் கொண்டு போகலாம். என்றாலும் இந்த ரோட் அவர்களுக்கு அவ்வளவு உபயோகமானதா யில்லை. ஏனென்றால், பிஷென்பூருக்குத் தெற்கே இந்த ரோடை இந்தியப் படைகள் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தடைகளை நீக்க ஜப்பானியர்கள் அரும்பாடு படுகிறார்கள். என்றாலும் முடிய வில்லை.

மணிப்பூர் ரோட் பகுதியில் மகா உக்கிரமாக ஜப்பானியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு உதவி பலமோ சப்ளைகளோ கிடைக்கும் என்று அவர்கள் நம்புவதற்கே இடமில்லை. இந்தப் பகுதியிலுள்ள நேச நாட்டுப் படைகளுக்கு விமானங்கள் மூலம் சப்ளைகள் வந்து சேருகின்றன. ஆனால், மழை ஆரம்பமானால், நிலைமை கஷ்டமாகி விடும். ஆனால், மழையின் கடுமை தணிந்து விமானங்கள் மூலம் சப்ளைகள் செய்யப்படவுங் கூடும். ஆகவே கஷ்டமான பருவ காலத்திலும் நமக்குத் தான் சாதகம்.

* * *

வட பர்மாவில் போர் நிலைமை: ஜப்பானியர்களுக்குப் பாதகம்.

வட பர்மா போர் முனையில் மியிட்கியானாவிற்குத் தெற்கிலுள்ள விமானக் கூடங்களிலிருந்தும், வடக்கேயிருந்தும் நம் படைகள் அந்நகரத்தைத் தாக்கி அதில் மூன்றில் ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்ட போதிலும், ஜப்பானியர்கள் தம் பிடிவாதமான, பாதுகாப்புத் தந்திர முறைகளால் நம் போக்கின் வேகத்தைத் தடைப் படுத்தினார்கள். அவர்களுக்குக் கடும் மழையும் ஆழ்ந்த சேறும் உதவியா யிருந்தன. மியிட்கியானா போராட்டத்தில் ஜப்பானியப் படைகள் பின் வாங்கிப் போக ஒட்டாதபடி, வழியிலுள்ள பல கிராமங்களை நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. மோகாங் பள்ளத் தாக்கில் சீனப் படைகள் படிப்படியாக முன்னேறிக் கொண்டு வருகின்றன. தெற்கே இப்போது ஜெனரல் ஸ்டில்வெல் கட்டளைக்குட்பட்டிருக்கும் ஜெனரல் லெண்டாக்னேயின் படைகள் பின்புறம் தாக்கிக் கொண்டிருக்கின்றன. யூனான் பகுதியில் சால்வின் ஆற்றங் கரையினின்று பர்மா எல்லைப்புறம் வரை, சீனப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. மியிட்கியானாவையும், மோகாங்கையும் பாதுகாக்கும் பொருட்டுப் போராடிக் கொண்டிருக்கும் ஜப்பானிய 18-ம் படைக்கு வேறு பகுதிகளிலிருந்து படைகளைக் கொண்டு வந்து உதவுவது மிகவும் கஷ்டம்.

இதினின்று வட பர்மாவில் ஜப்பானியருக்கு போர் நிலை பாதகமா யிருக்கிறதென்று தெளிவாகத் தெரிகிறது. இதைக் கொண்டு, வெகு விரைவில் மியிட்கியானா முழுதுமோ அல்லது மோகாங் முழுதுமோ நேச நாட்டுப் படைகள் வசப்பட்டு விடுமென்று அர்த்த மல்ல. ஏனென்றால், குழிகளிலிருந்து கொண்டே போராடுவதில், ஜப்பானியர்கள் மிகச் சிறந்தவர்களென்று புகழ் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பாதுகாப்புப் போராட்டத்திற்கு மழை காலமும் உதவியா யிருக்கலாம். அல்லாமலும் படைகளுக்குச் சுற்றுப் பாதைகள் வழியாகவும் சப்ளைகள் அனுப்பக் கூடும்.

ஆனால் மியிட்கியானாவில் நடைபெறும் போராட்டத்தைக் குறித்து ஜப்பானிய வானொலி நிலையங்கள் ஒன்றும் கூறாது இருப்பது குறிப்பிடத் தக்கது. இங்கேயும் பிற விடங்களிலும் நடைபெறும் போராட்டம் சம்பந்தமாக, மிகவும் மிதமாகவே தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். தம் உள் நாட்டவர்கள் மட்டும் கேட்கும் ஒலிபரப்புப் பிரசங்கங்களில், தம் படையினர் இங்கே படும் துன்பங்களைக் குறித்து வற்புறுத்திப் பேசுகிறார்கள். உதாரணமாக ஒரு ஜப்பானிய உத்தியோகஸ்தர், தான் இம்பாலில் பெற்ற அனுபவங்களைக் குறித்துக் கூறியதாவது:—

" இந்தப் போர் முனையில் போராடும் நம் படைகளின் கஷ்டங்கள் சப்ளைகள் குறைவாலும் விமான ஆதிக்கக் குறைவாலும் தான் ஏற்படுவன (இவ்விரண்டையும் தெளிவாக ஒப்புக் கொள்ளுகிறார்கள்). அன்றியும் நமது எதிரிகள் சப்ளைகளைப் போல திறமையாக நமது சப்ளைகள் வந்து சேருவதில்லை. நமது எதிரிகளுக்கு விமான மூலம் உணவு சப்ளைகள் வந்து கொண்டிருந்த போது, ஒரு பிடி யளவு பார்லியோ, கடலையோ தின்று கொண்டே நாம் கடும்போராட வேண்டி யிருந்தது. நான் அங்கிருந்த 8 நாளில் ஒரு விமானத்தைக் கண்டேன். அது நம் விமானத்தைப்போலவே தோன்றியது. அதைக் கண்டு நம் படையினர் அளவிலா மகிழ்ச்சி கொண்டனர்."

மற்றொரு முக்கியமான விஷயம். டோக்கியோ வானொலி நிலையமும் அதைச் சார்ந்த நிலையங்களும், இந்தியாவைத் தாக்கிக் கைப்பற்றி விடப் போவதாகப் பறை சாற்றிக் கொண்டிருந்ததை இப்போது அடியோடு கை விட்டு விட்டன. விரைவாகவும் இலகுவாகவும் வெற்றி பெற்று விடப் போவதாக மகா தைரியத்துடன் கூறிக் கொண்டிருந்த இவர்கள், தம் கஷ்டங்களைக் குறித்துப் பேசும்படியாகி விட்டது. அவர்களுடைய பிரசாரப் போக்கில் இப்படிப்பட்ட மாறுதல்கள் நேர்ந்ததற்குக் காரணம் என்ன ? வசதிப் பொருட்களிலும், பயிற்சியிலும், கஷ்டங்களைச் சகிக்குந் திறமையிலும் அவர்களுடைய படைகளை விட, நம் படைகள் மிகவும் மேம்பட்டிருக்கின்றன வென்று இப்போது தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

வானொலி நாட் குறிப்புக்கள்.

திருச்சி—ஜூன்மீ 10உ மாலை 7-15—" பிரிட்டனின் சேவை "—ராவ்சாஹிப் ஆர். வி. சுந்தர ரெட்டியார்.

ஷ 11உ மாலை 7-15—" உலக அரசியலில் இஸ்லாம் "—அராபிய சமஷ்டி— கான்பகதூர் பி. ஷெர்புதீன்.

ஷ 13உ மாலை 7-15—" யுத்தமும் நாமும் ".

சென்னை—ஜூன்மீ 14உ மாலை 7—" யுத்த முயற்சி ".

திருச்சி—ஜூன்மீ 14உ மாலை 7-45—" சண்டையிலும், சமாதானத்திலும் நேச தேசங்கள் "—சர். பி. டி. ராஜன்.

இஸ்லாமிய நாடுகள் மீது அச்சு அரசாங்கங்களின் கண்ணோட்டம்

பண்டை நாகரிகமும் கலை உயர்வும்

ஜப்பானியர் சூழ்ச்சி தோற்றது

சமீபத்தில், தேசியப் போர் முனை அமைப்பாளரும் கௌரவ உதவி டெக்னிக்கல் ரிக்ருட்டிங் ஆபீசருமான கம்பம் கான் சாகிப், எ. கே. பி. பி. ராவுத்தர் அவர்கள் திருச்சினுப்பள்ளி அகில இந்திய வானொலி நிலயத்தில் ஒலி பெருக்கிய சொற் பொழிவு.



கம்பம், கான் சாஹிப் எ. கே. பி. பி. ராவுத்தர்.

கடவுள் கடைசியாக ஒப்புக்கொண்ட மார்க்கம் இஸ்லாம், என்னும் தெய்வ வாக்கு ஜீப்ரில் அலை கிஸ்ஸலாம் என்னும் தேவதூதர் மூலமாக பூலோகத்திற்கு அனுப்பப்பட்டது. உத்தம வேதமாகிய இஸ்லாம் சத்தியத் திரு நபி அவர்கள் மூலம் பூமியின் கண் அருளப்பட்டது. சொருபம், வடிவம் அற்ற எங்கும் நிறைந்த ஏக பராபரனாகிய ஆண்டவன் ஒருவனென்றும், அவனையே வணங்க மானிட மக்கள் கடமைப்பட்டுள்ளார் என்றும் திருத்தப்பட்ட இஸ்லா மதம் ஏனைய மக்கள் எளிதில் ஒப்புக் கொண்டு, இப்போது அகில லோகத்திலும் ஜோதியாய் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

இஸ்லாமிய சகோதரத்துவம்

பல நூற்றுண்டுகளுக்கு முன்னர், அஞ்ஞானம் குடி கொண்டு சண்டாளர் வாழ்ந்த அரேபியா தேசத்திலே, திரு. மக்கமா நகரத்தில நபிகள் திலகம் ஜனித்து, எதையும் கேளாத மூர்க்கரான அந்த அராபியர்களிடத்தில் இஸ்லாத்தைப் பரப்பினுர்களே யானுல், மார்க்கத்தின் நேர்மையும் தூய்மையும் சத்தியமும் எத்தகையது என்று மக்கள் சிந்திக்க வேண்டும். பரிசுத்த இஸ்லாம் எவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு, தீவிரமாக வளர்ந்து இப்பூமண்டலம் பூராவையும் சுற்றிக் கொண்டது. இஸ்லாம், சகோதரத்துவத்தை வலுவூட்டிப் போதித்து வந்தமையால், இஸ்லாமியர் எத்தேசத்தவராயினும் சகோதரர்களாகவே பாவிக்கப்பட்டு இஸ்லாம் என்னும் அன்பின் தொடர்பால் கட்டுண்டு போயினர். ஆகவே இஸ்லாம் அரேபியா நாட்டிலே உற்பத்தியாகி சில நூற்றுண்டுகளுக்குள் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களுக்குப் பரவி விட்டது. மேற்கே ஸ்பெயின் தேசம் வரையும் கிழக்கே சீன வரையும் தெற்கே எகிப்து இந்தியா பஸிபிக் தீவுகள் வரையும் விசாலித்து வேரூன்றிப் போய்விட்டது. உலகில் எந்த மதத்தவரும் காணுத அவ்வளவு விசாலமான பூமிக்கு அதிபதியுமாயினர்.

கலீபா தோற்றம்

முஸ்லீம்கள் பெருகி அநேக ராஜ்யங்களில் குடியேறின காலத்து, ஆங்காங்கு அநேக விரோதிகளும் எதிர்ப்புக்களுமிருந்தமையால், இஸ்லாமியர்களுக்கு யாதொரு தீங்கும் அணுகாமல் காப்பாற்ற இஸ்லாமிய உலகத்திலே வல்லரசாய் விளங்கின மாட்சிமை தங்கிய துருக்கி சுல்தான் அவர்களை கலீபா என்னும் காவலராய் நியமிக்கப்பட்டிருந்தது. இவர் அரசியல் துறையிலும் மத சம்மந்தமாகவும் தலைவராயிருந்தார். அரேபியா, ஈரான், ஈராக், எகிப்து, ஆப்கானிஸ்தான் முதலிய முஸ்லீம் நாடுகளெல்லாம் துருக்கி சுல்த்தானைத் தான் தங்களுடைய தலைவராக (கலீபாவாக) ஏற்றிருந்தன. முன்னொரு காலத்தில் துருக்கிக்கும் ரஷ்யாவுக்கும் நடந்த சிலுவைச் சண்டையிலும் கூட, ஏனைய முஸ்லீம் நாடுகளும் துருக்கியின் சார்பு நின்றதாகச் சரித்திர வாயிலாக நாம் அறிகின்ருேம்.

இஸ்லாமும் சிற்பமும்

இஸ்லாமிய மதம் எங்கெங்கு பரவியதோ அங்கெல்லாம் மதம், கலை, பாஷை, நாகரிகம் எல்லாம் செழித் தோங்கின. அது மட்டுமல்லாமல் அரசாட்சி முறைகளும் இஸ்லாமிய சட்டப்படி கொஞ்சமும் அணுத் தவராமல் நடத்தப்பட்டு வந்தது. இஸ்லாமியர் சிற்ப சாஸ்திரக் கலைகளில் தேற்சி பெற்றவர்களானபடியால், அவர்களால் ஆளப்பட்ட தேசங்களிலெல்லாம் விசித்திரமான வளைவுகள், கூடங்கள், மினராக்கள் முதலிய சிற்ப சாஸ்திரக் கலைகள் நிறைந்த அழகிய சின்னங்களை இப்போதும் காணலாம். இந்திய நாட்டை அரசு புரிந்த மொகலாய சக்கரவர்த்திகளிலொருவராகிய ஷாஜெகான் தன் மனைவி மும்டாஜ் என்ற சக்கரவர்த்தினியின் ஞாபகார்த்தமாக கட்டுவித்த டாஜ் மகால் என்னும் அழகிய கட்டிடம் இப்போதும் ஆக்ராவில் யமுனு நதிக் கரையில், உலகிலுள்ள ஒன்பது அற்புதங்களில் ஒன்ருக ஜொலித்து வருவது உலகறிந்த விஷயம்.

இஸ்லாமிய நீதி

இஸ்லாமிய உலகில் அரசாட்சி முறையைக் கவனித்தால் சர்வ ஜனங்களுக்கும் பொருத்தமானதும், யாவராலும் ஒப்புக் கொள்ளக் கூடியதுமான சட்ட திட்டங்களையே நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது. நாகரிக ராஜ்யங்களாக இப்போது காணப்படும் அநேக வல்லரசுகள் முஸ்லீம்களின் சட்ட திட்டப்படி தான் ராஜ்ய பரிபாலனம் செய்கின்றன. சுமார் 700 வருடங்களுக்கு முன் நம்மிந்தியா தேசமானது முஸ்லிம் மன்னர்களான மொகலாய சக்கரவர்த்திகளால் ஆளப்பட்டு வந்தது. அவர்களால் கையாண்டு வந்த அரசியல் முறைகளைத் தான் இப்போதும் நம் நாட்டில் அனுஷ்டித்து வருகின்றனர். மொகலாய மன்னர்களில் சிறந்த அக்பர் பாதுஷா அரசாட்சிக்குரிய அநேக திட்டங்களை சீர்திருத்தி அமைத்தார். அவைகள் தான் இப்போது ரொம்ப வடிகட்டிய நாகரிக முறையில் அமைக்கப்பட்டு நமது நாட்டிலே, நமது பிரிட்டிஷ் துரைத்தனத்தாரால் மனு நீதி என்று சொல்லப்படும் ஒப்பற்ற நீதிகளைக் கொஞ்சங்கூடத் தவருமல் நடத்தி வரும் நமது நீதி ஸ்தலங்களாகும்.

முஸ்லீம் ஆட்சியில் வியாபாரம்

"திரை கடலோடியும் திரவியம் தேடு" என்னும் பழமொழியை அராபிய முஸ்லீம்கள் தான் ஆதியில் கையாண்டு வந்தனர். பல நூற்றுண்டுகளுக்கு முன்பே அராபியர்கள் இந்தியருடன் உறவாடி வியாபாரம் செய்தார்களென நாம் கேள்விப்பட்டிருக்கிருேம். சமுத்திரங்கள் மீது செல்லக்கூடிய நீராவிக் கப்பல்களைக் கண்டு பிடிப்பதற்கு முன்பாக காற்றின் உதவியால் செல்லக்கூடிய மரக்கலங்களில் நெடுந்தூரம் தண்ணீர் மேல் பிரயாணம் செய்து அநேக அந்நிய நாடு

களில் வியாபாரம் செய்தவர்கள் அராபியர்கள் தான். தேசங்களுக்கிடையே வியாபாரம் செழிப்புற நடந்தால், இயற்கையாகவே அத்தேசங்களிடையில் நாகரிகம், நடையுடை பாவனை எல்லாம் பரப்பப்படுகின்றன. ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவும் ஏற்படுகின்றது. அராபியர்கள் அடிக்கடி இந்தியாவுக்கு வந்து கொண்டிருந்தமையாலும், பிற்பாடு பாரசீக மன்னர்கள் படையெடுத்து நாட்டை ஆண்டதினுலும், இந்தியாவில் உர்து, ஹிந்தி என்னும் அராபி பார்ஸி சமஸ்கிருதம் மூன்றும் கலந்த பாஷை, வட இந்தியாவிலே பிரதான தாய்ப் பாஷையாக ஏற்பட்டுப் போயிற்று.

இஸ்லாமியமும் ஜனநாயகமும்

இஸ்லாம் ஜனநாயகத்தைத் தழுவியே ஸ்தாபனம் செய்யப்பட்டிருப்பதால், இஸ்லாமியரால் ஆளப் படும் நாடுகளில் ஜன நாயக உரிமை, கூட்டுறவு, சகோதரபான்மை மதாபிமானம், தேசாபிமானம் எல்லாம் ததும்பி போயிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், சேர்ந்து வாழ்தல், கூடிப் புசித்தல், ஏக வணக்கம், பெண் அரசியல் முறைகளைக் கைப்பற்றி ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் ஓர் சிறந்த ஜன நாயக முஸ்லிம் வல்லரசாய் ஜொலித்துக் கொண்டிருக்கிறது.

உலக அரசியலில் முஸ்லீம் நாடுகள்

உலகிலுள்ள முஸ்லிம் நாடுகளாகிய துருக்கி, ஈரான், ஈராக், சிரியா, லெபனுன் துர்க்கிஸ்தான், அல்ஜீரியா, டுனீஷியா, மொராக்கோ, லிபியா, சூடான், டிரான்ஸ் ஜோர்டோனியோ, எகிப்து, அரேபியா, பெலுசிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் தேசங்களெல்லாம் மூன்று கண்டங்களிலும் மத்திய பாகங்களில் ஒரே தொடர்பாக அமையப்பெற்று இயற்கையின் சித்தரிப்பு வசதிகளையும் அடைந்து அநேக கேந்திர ஸ்தானங்களுக்கு அதிபதிகளாகவும், திறளான முஸ்லீம் ஜனத் தொகைகளை உடையவைகளாகவு மிருக்கின்றன. ஐரோப்பா முதலிய மேல் நாடுகளிலிருந்து இந்தியா முதலிய கீழ் நாடுகளுக்கு வரக்கூடிய தரை, தண்ணீர், ஆகாயப் பாதைகளின்மேல் முஸ்லீம் நாடுகளில் பெரும்பான்மையானவைகள் இருக்கின்றமையால், மேல் நாடுகளாகட்டும் அல்லது கீழ் பிரதேசத்தில் ஆதீனம் வைத்திருக்கும் எந்த வல்லரசாகட்டும் இவைகளுடன் எப்போதும் உறவாடி ஒன்று பட்டிருக்க அவசியம் ஏற்படுகிறது. எனவே, முஸ்லிம் நாடுகள் உலக அரசியலில் சிறப்புற்றவைகளாகவும் முக்கியமானவைகளாகவும் காணப்படுகின்றன.

முஸ்லிம்கள் அரசாட்சி பண்ணும் நாடுகள் தவிர, சீன, ரஷ்யா தேசங்களிலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியா பர்மா, மலேயா, சிலோன், என்னும் நாடுகளிலும் ஏராளமான முஸ்லிம்கள் வசித்துவருகின்றனர். உலகத்திலே ஆக 200 கோடி முஸ்லிம்கள் வசிக்கின்றனர். முஸ்லிம் நாடுகளுக்கும், உலக வல்லரசுகளுக்கும் ஓர் தொடர்பு இருந்துகொண்டு வருகிறது. அதனுல் தான் இப்போது நடக்கும் யுத்தத்தில் முஸ்லிம் நாடுகள் நேசநாடுகளின் சார்பில் தீவிரமாய் ஒத்துழைக்கின்றன. இந்தியா சம்பந்தப்பட்ட மட்டில் 8 கோடி முஸ்லிம்கள், பிரிட்டனின் ஆதீனத்திலிருந்து வருகின்றனர். இந்தியா முஸ்லிம்களையும் இதர நாட்டு முஸ்லிம்களையும், மதாபிமானம் என்னும் நட்பு ஒன்று சேர்க்கிறது. இதைத் தழுவி பிரிட்டனும் முஸ்லிம் நாடுகளின் மீது பரஸ்பரம் சிநேகித பான்மையையும் சலுகைகளையும் காட்டிக் கொண்டு வருகிறது.

ஜப்பான் சூழ்ச்சி பலிக்க வில்லை

இவைகள் இப்படியிருக்க, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் முதலிய அச்சு நாடுகள் எந்த விதத்திலும் முஸ்லிம்களுக்கும் பிரிட்டனுக்கு மிருக்கும் தொடர்பைக் கத்தரிக்க வேண்டுமென்ற ஜெகஜாலப் புரட்டுகளெல்லாம் செய்து பார்க்கின்றன. அப்படிச் செய்தால் தான் தங்கள் நாடுகளை விசாலப்படுத்தும் கோரிக்கை நிறைவேறும். இதற்காக வேண்டி எத்தனையோ சதி ஆலோசனைகள் புரட்டுகள் செய்துபார்த்தனர். சில வருடங்களுக்கு முன்பு அரேபியாவில் நஜத் கிஜான் யுத்தம் நடந்தபோது, வகாபி மன்னன் இபுறு சுறு குதி அராபியாவை வசப்படுத்த வேண்டுமென்று படை திரட்டிய காலத்தில் ஜப்பான்காரன் பருத்தி விற்பதுபோல் பாசாங்கு செய்து அரேபியாவில் தன்னுடைய தொடர்பையும் செல்வாக்கையும் ஏற்படுத்தி பிரிட்டனுக்கும் அரேபிய நாட்டு முஸ்லிம் மன்னர்களுக்கும் பொல்லாங்கு நிகழ்த்துவதற்காக எவ்வளவோ சூட்சிகள் தந்திரங்கள் செய்து பார்த்தான். ஆனுல் ஒன்றும் பலித்த பாடில்லை.

இத்தாலிய ஜனங்கள் இயற்கையாகவே முஸ்லிம்களுக்கு விரோதி. இத்தாலியத் தலைவன் முசோலினி அபிஸீனியா தேசத்தின் மீது படை யெடுக்கு முன் ஓர் பெரும் பாசாங்கு செய்தான். அபிஸீனியாவில் நூற்றுக்கு இருபது பேர் முஸ்லிம்களாகையால், தான் முஸ்லிம்களின் ரட்சகன் இஸ்லாத்தைக் காப்பாற்றுகிறவன் என்று பறை சாற்றினன். பாமர மக்கள் நம்பவும் செய்தார்கள். ஆனுல் யுத்தகாலத்தில், எலிக்குப் புகை மூட்டி அழித்தது மாதிரி அங்குள்ள முஸ்லிம் மக்களை வாட்டி வதைத்து விஷப் புகையாலும் விமானக் குண்டு வீச்சாலும் வங்கொலை செய்தான். பொல்லாத அரக்கனென்று பெயரு மெடுத்தான். ஷிண்டோ பைசாசுக்கும் இந்த தரித்திரம் விடவில்லை. 'அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பான்' என்பது போல, பசிபிக் பிராந்தியத்திலும் பர்மாவிலும் சீனவிலும் வெற்றி கிடைத்தவுடனே, ஜப்பானியப் பேயர்களும் முஸ்லிம் நாடுகள் பூராவையும் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று, தாங்களும் இஸ்லாமிய ரட்சகர் என்று டாம்பீகரமாய் பிதற்றிக் கொள்கின்றனர். முஸ்லிம்கள் ஒன்றுபட்டால் குள்ளர்களின் கதி என்ன ஆகுமென்று நினைக்கவில்லை போலும். ஜப்பானியனின் மண்டைக்கர்வம் அடங்குவதற்கு நாள் நெருங்கிக்கொண்டு வருகிறது.

புது ரட்சகரின் கூற்று

புது முஸ்லிம் ரட்சகரின் கூற்றைச் சற்று கவனிப்போம். 1941-வது வருஷம் டிசம்பர் மாதம் 26-ம் தேதி மலேயாவில் தலை நகராகிய கோலாலம்பூரில் குண்டு வீசியபோது அன்று ஜும்மா தொழுகைக்கு ஏராளமாக முஸ்லிம்கள் கூடியிருந்த பள்ளியின்மேல் குண்டுவீசிப் பள்ளியையும் தகர்த்து ஏராளமான பக்தர்களையும் கொன்றுவிட்டனர். இந்த நிகழ்ச்சி வேண்டுமென்றே முஸ்லிம்களைப் பயமுறுத்துவதற்காகவே செய்யப்பட்டது. இதுமட்டுந் தானு, டிரங்காங் என்னும் பட்டணத்திலே ஓர் மதக் கல்லூரிக்குள் பிரவேசித்து திருகுருனைக் கிழித்தெறிந்து அவ்விடத்தில் ஓர் ஜப்பானிய விக்கிரகத்தை நாட்டி வைத்துவிட்டுப் போனுர்கள். இந்தக் கயவர்கள் தான் இஸ்லாமிய ரட்சகர்கள் போலும்!

முசோலினியின் அந்தரங்கக் கொள்கை

தந்திரத்திலோ மந்திரத்திலோ முஸ்லிம் நாடுகளை நசுக்கவேண்டியது தான் இத்தாலியத் தலைவர் முசோலினியின் கொள்கை. மற்ற அச்சுநாட்டுக் கொள்ளைக்காரர்களும் அவனுக்குக் குறைந்தவர்களல்ல. முசோலினி அல்பேனியா லிபியா போன்ற நாடுகளை மாய்த்தான். குள்ள ஜப்பான் மஞ்சூரியாவைக் கபளீகரம் செய்துவிட்டான். ஜெர்மன்காரர்கள், ஓனுய் ஆட்டுக்குட்டிகளைத் தூக்கிக்கொண்டு போவது மாதிரி, ஐரோப்பாவிலுள்ள சிறு நாடுகள் பூருவையும் தின்று ஏப்பம் விட்டுவிட்டார்கள். 30 வருட ஆட்சிக்குள், லிபியா மக்களுக்கு இத்தாலியர் மீது கசப்பு ஏற்பட்டுப் போய் எப்போது தொலைவார்கள் என்று எதிர் பார்த்திருந்தனர். ஆண்டவன் அருள் புரிந்துவிட்டான். லிபியாவிலிருந்து இத்தாலியர் விரட்டியடிக்கப்பட்டுப் பே யினர், ஜெர்மன்காரன் பிடிபட்ட ரஷ்யாவிலுள்ள முஸ்லிம் குழந்தைகளின் உடுப்புகளை மாற்றி, ஜெர்மன் பெயர்களை வைத்துத் தங்கள் நாடுகளுக்குக்கொண்டு போய்விட்டார். ஜப்பான்காரன் எத்துறையிலும் இவர்களுக்கு குறைந்தவனல்ல. பிடிபட்ட நாடுகளிலிருந்து சகல வஸ்துக்களையும் பலாத்காரமாக அடித்துக் கொண்டு போகும் பெரும் கூட்டக் கொள்ளைக்காரன். முஸ்லிம்களுக்கு தாங் கொணுக் கெடுதி செய்கிறவன். மஜூதிக்குள் பன்றிகளை அடைக்கிறதும் வெட்டுகிறதும் எதிர்க்கும் இஸ்லாமியர்களை வெட்டி வதைக்கிறதும் தான் இவர்களின் வேலை. இப்பேர்ப்பட்ட ராட்சதர்களும் பைசாசுகளும் இந்திய நாட்டையோ அல்லது வேறு எந்த முஸ்லிம் நாட்டையோ பிடித்தால், கதி என்ன ஆகுமென்று யோசித்துப் பாருங்கள். அச்சு நாட்டார் கையில் இஸ்லாமிய நாடுகள் அகப்பட்டால் அன்றே ஒழிந்துவிடும் நம் பரிசுத்த இஸ்லாம். ஆகவே அச்சு நாட்டான் யாராயிருப்பினும் சரி, அவன் இஸ்லாத்திற்கு விரோதி என்று ஒவ்வொரு முஸ்லிமும் கருதி அவனைத் தொலைப்பதற்கு வழி தேடவேண்டும்.



பக்கிங்ஹாம் அரண்மனையில் மன்னர்பிரான் சாம்ராஜ்ய நாடுகளின் பிரதம மந்திரிகளுக்கு விருந்தளித்தார்.

ஹிட்லர் விரும்பாத செய்திகள்

ரோமாபுரியின் எல்லைக்குள், ஐந்தாவது சேனை புகுந்து விட்டது. இப்புண்ணிய நகரை முதன் முதலில் தெரிசித்தவர்கள், அந்த சேனையிலிருந்த அமெரிக்கர்கள் தான். ஜெர்மானியர் ரோமாபுரியை காலி செய்து விட்டு, தலை விரி கோலமாக ஓடுகிறார்கள் பின்னுக்கு. ஐந்தாவது சேனையோடு, எட்டாவது சேனையும் போட்டி போட்டுக் கொண்டு வெற்றி மாலைகளைச் சம்பாதித்து கொண்டு வருகின்றன. கூடிய சீக்கிரமே இத்தாலியில் உள்ள ஜெர்மன் படைகளையெல்லாம் நிர்மூலமாக்கி விட வேண்டும் என்று நேச தேசப் படைத் தலைவர்கள் தீர்மானம் செய்து கொண்டிருக்கிறார்கள். அமெரிக்க விமானங்களுக் கென்று ருஷ்யாவில் ஒரு தளம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே போன வாரம், மத்திய கிழக்குப் பிரதேசத்திலிருந்து ஐரோப்பா மீது குண்டுகளை வருஷித்து விட்டு, பல விமானங்கள் சென்று இறங்கின. இனி இங்கிருந்து கிழக்கு ஐரோப்பா தாக்கப்படும். ஜூன், ஜூலை அல்லது ஆகஸ்டு மாதங்களில் இரண்டாவது போர்முனை ஆரம்பமாகக் கூடும் என்று அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பத்திரிகா நிருபர்களுக்குச் சொன்னார்.

ஹிட்லர் போலிருந்தால் ?

இப்படிப்பட்ட செய்திகள் எல்லாம் தினசரி வெளிவந்து கொண்டிருக்கின்றன. நீங்களே ஹிட்லர் நிலைமையில் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். "ஐயோ! ரொம்ப தரித்திரமான நிலையாச்சே அது. தினம் விடிந்தால் ஏகக் கவலையும், பிடுங்கலுமாச்சே! யுத்தம் முடிந்தால் என்ன செய்வது? ஆகவே யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று ராக்ஷஸத் தன்மையோடு விருப்பங் கொண்டிருக்க வேண்டுமே! அது என்ன பிழைப்பய்யா? இந்த நிலைமையில், எனது ஜென்ம விரோதியைக் கூட இழுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ள மாட்டேனே!" என்று சொல்லுவீர்கள் என்று தெரியும். ஆனாலும், நீங்கள் ஹிட்லருடைய நிலைமையில் இருந்தால், மேற்கண்ட செய்திகள் எல்லாம் உங்கள் செவிகளுக்கு, ஏதோ நாராசத்தைக் காய்ச்சி ஊற்றியது போலிருக்கும் என்பதில் சந்தேகமே யில்லை. இந்தச் செய்திகளின் தலைப்புக்களே இம்மாதிரியான கசப்புட னிருந்தால், இவற்றின் விவரங்கள் மனதை உடைத்து விடுவது போல் தானிருக்கும்.

நேசதேசப்படை ஒற்றுமை

ரோமாபுரியை நேசப் படைகள் இவ்வளவு துரிதமாக அணுகி விடும் என்று ஹிட்லரின் ஆளான கெஸல்ரிங் துரை சிறிதும் எதிர் பார்த்திருக்கவே மாட்டார். அது என்னடா என்றால், திடீரென ஆகாயம் கறுத்து, இருண்ட மேகங்கள் எங்கும் பரவி, கொட்டு கொட்டென்று மழையும் கொட்டுவது போல, நேச தேச ஐந்தாவது, எட்டாவது சேனைகள் எதிர் பாராதவாறு ஒன்று கூடி, முன்னேறிச் சென்று நாஸிகளைத் திணற அடித்து விட்டன. கெஸல்ரிங் பாடு ரொம்ப சிரமமாகி விட்டது. மே மாதம் 23-ம் தேதி யன்று ஆரம்பமான நேச தேசத் தாக்குதல், சுமார் 17, 18 நாட்களுக்குள்ளாக பிரமாதமான காரியங்களைச் சாதித்திருக்கின்றது. பல தேசத்தவர்களும் கலந்த பெரியதொரு கதம்பப் படையை ஒழுங்காகக் கட்டுப்படுத்தி முன்னேறி தாக்கச் செய்வது ஒரு பெரிய காரியம் தான். இந்தியர்கள் என்ன, பிரஞ்சுக்காரர்கள் என்ன, அமெரிக்கர்கள் என்ன, பிரிட்டிஷார் என்ன, போலந்து வீரர்கள் என்ன, மற்றும் உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள பராக்கிரமசாலிகள் என்ன எல்லோரும் இத்தாலியில் ஒற்றுமையாக, தங்கள் லக்ஷியத்தை அடையப் பெரும் பாடுபட்டு வருகிறார்கள். இவ்வளவு பாடும் வீணாகி விடுமா என்ன? அதேன் வீணாகப் போகிறது? கூடிய சீக்கிரமே இத்தாலியப் போர் முடிந்து விடலாம். ஜெர்மானியர் இத்தாலியை லேசிலே காலி செய்ய மாட்டார்கள். இன்னும், காஸினோப் போர் மாதிரி சில கடுமையான போர்கள் நடக்கக் கூடும். நமது படைகளோ எண்ணிக்கையிலும், பலத்திலும் நாஸிப் படைகளின் எண்ணிக்கை, பலம் ஆகியவற்றை விட எவ்வளவோ பங்கு அதிகமாக இருக்கின்றன. ஆகவே, நாஸிகளின் எதிர்ப்பைப் பற்றி நாம் கவலைப்படவே தேவை யில்லை. பெரிய, செங்குத்தான, மரஞ் செடிகளற்ற, பாறைகள் நிறைந்த மலைச்சரிவு ஒன்றின் உச்சியி லிருந்து கீழே உருளும் காரை ஒத்து இருக்கிறது ஜெர்மானியரின் யுத்தப் போக்கு. இனி அவர்களை பிரம்ம தேவனாலும் காக்க முடியாது.

போப்பாண்டவர் பேசுகிறார்

இத்தாலியிலே, நேசதேசப் படைகள் ரோமாபுரியை நெருங்கும் சமயத்திலே, போப்பாண்டவர் ஒரு அறிக்கை விடுத்தார்.

'இந்த ரோமாபுரி மகா புனிதமான நகரம். ஸெயின்ட் பீட்டரின் நகரம் இது. உலக நாகரிகத்திற்கு இதுவே பிறப் பிடமாகும். இதைத் தொடாது விட்டு விடுவார்கள் இந்த யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் என்று நினைக்கிறேன். இந்த புண்ய க்ஷேத்திரத்தைத் தாக்குவது, சொந்தத் தாயையே கொல்வதற்குச் சமானமாகும்' என்றார் அவர்.

ரோமாபுரியை விடுகிறார்கள்.

கல் நெஞ்சு படைத்த ஜெர்மானியர், மேற்கண்ட வேண்டுகோளைக் கேட்டு மனங் கரைந்து தான் போனார்களோ, அல்லது ரோமாபுரியில் நீண்ட காலம் பத்திரமாகத் தங்கியிருக்க முடியா தென்று எண்ணிக் கொண்டார்களோ, அவர்கள் வெகு துரிதமாக ரோமாபுரியைக் காலி செய்து விட்டு, பின் வாங்கிவிட்டார்களாம். இது போப்பாண்டவருக்கும், உலக மக்களுக்கும் ஆனந்தத்தைத் தரத் தக்க செய்திதான். ரோமாபுரி வாசலிலே கடும் எதிர்ப்பு இருக்கு மென்று எண்ணி நேச தேசத்தவர்கள் ரொம்ப ஏமாந்து போனார்கள். ஜெர்மன் படைகள் பின் வாங்கி ஓடும்போதே, அவர்களது பின்னணிப் படைகள் நமது சேனைகளுக்குக் கொஞ்சம்

(8-ம் பக்கம் பார்க்க)

தென்னிந்தியாவின் இணையற்ற சிறப்பு

யுத்தம் ஆரம்பமானதி லிருந்து, தொழிற் பயிற்சி தேவை யில்லாத படைகளில் இது வரை 322,479 பேர்கள் சென்னை மாகாணத்திலும், திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை, பங்கனபல்லி சமஸ்தானங்களிலிருந்தும் சேர்ந்திருக்கிறார்கள். எல்லாப் பகுதிகளையும் விட வடாற்காட்டிலிருந்து தான் வெகு அதிகம் பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். மொத்தத்தில் 11 சத விகிதம் வடாற்காடு ஜில்லாவிலிருந்து சேர்ந்தவர்கள். அடுத்தபடியாக மலையாள ஜில்லா, பிறகு திருநெல்வேலி ஜில்லா, திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்கள்.

படையில் தாம் சேரும்போது, எந்தத் தொழிலை மேற் கொள்ள வேண்டு மென்னும் நோக்கத்தோடு அந்தத் தொழிற் பயிற்சி ஒரு சிறிதுமின்றி யார் சேருகிறார்களோ அவர்களுக்குத் தான் "நான் டெக்னிகல் ரிக்ரூட்" என்று சொல்லுவது.

சென்னைக் கார்லாட் படை, இன்சினீர் படை, பீரங்கிப் படை, இந்திய சமிக்ஞைப் படை, ஐ.ஏ.எம்.சி., ஆர்.ஐ.ஏ.எஸ்.சி., ஆகிய படைகளில் இப்போ திருப்பவர்கள் பெரும்பாலும் நன்கு பயிற்சி பெற்றவர்கள். 10 சதம் பேர்கள் பயனீயர் படைக்குச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கியு.வி.ஓ., சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ், 3-வது சென்னைப் படை ஆகியவற்றிலும் ஏராளமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

உபயோகமான பல வகைக் கைத் தொழில்களை இவர்கள் கற்றுக் கொள்ளுகிறார்கள். யுத்தத்திற்குப் பிறகு இந்தத் தொழில்கள் இவர்களுக்கு மிகவும் பயன் படுவனவா யிருக்கும். அதாவது யுத்தத்திற்குப் பிறகு ஏற்படப் போகும் புனர் நிர்மாண வேலைகளைச் செய்வதற்குத் தேர்ச்சி யுள்ளவர்கள் சென்னையில் ஏராளமாகக் கிடைப்பார்கள்.

இப்போதுங் கூட, படைகளில் ஏராளமான பேர்கள் சேருவதனால், பட்டணங்களிலும் கிராமங்களிலும் அதன் பலாபலன்கள் இருக்கத் தான் செய்கின்றன. உதாரணமாக குண்டூர் ஜில்லா, பாபட்லா தாலூகாவைச் சேர்ந்த சண்டோல் கிராமத்திலிருந்து மட்டும் 425 பேர்கள் படைகளில் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களுடைய குடும்பத்தாருக்கு மாதந் தோறும் ரூ. 3,293 இராணுவ மணியார்டர்கள் வருகின்றன. அன்றியும் சாதாரண மணியார்டர்களாக ரூ. 2,026 வருகிறது. தவறாது இத்தொகைகள் மாதந்தோறும் வந்து கொண்டிருந்தால், அந்தக் கிராமத்திலும், தெற்கே யுள்ள மற்ற கிராமங்களிலும் உள்ளவர்களின் வாழ்க்கை நிலைமை உயரத்தான் செய்யும்.

விவசாயிகளுக்குக் கடன் வசதி

சென்னை அரசாங்கத்தார் 20-5-44-ம் தேதி ரெவின்யூ இலாக்கா மூலம் 72-ம் நம்பர் கொண்ட அறிக்கை யொன்றை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கை நில விருத்திக் கடன், விவசாயக் கடன் ஆகியவற்றிற்கு மனுப் போடும் நமூனாக்களைப் பற்றியது. அது வருமாறு :—

நில விருத்திக் கடன் மனு நமூனாக்களும், விவசாயக் கடன் மனு நமூனாக்களும் குடியானவர்களுக்குப் போதுமான அளவு கிடைப்பதில்லை யென்று அரசாங்கத்திற்குத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கடன் மனு நமூனாக்கள் தனிபட்டதாக ஏதோ இருப்பதாகத் தவறாக நினைத்துக் கொண்டு தான், இப்படிக் குறை கூறுகிறார்களென்று தெரிகிறது. விதிப்படி ரெவினியு இன்ஸ்பெக்டருக்குக் குறையாத தோர் உத்தியோகஸ்தரிடமாவது, ஜில்லா விவசாய அதிகாரியிடமாவது, வாய் மூலமாகவாவது எழுத்து மூலமாகவாவது கடனுக்கு மனுச் செய்து கொள்ளலாம். எழுத்து மூலமான மனு ஒரு விசேஷித்த நமூனாவில் அமைந்திருக்க வேண்டு மென்னும் நியதியில்லை. கீழ்க்கண்ட தகவல்கள் மட்டும் அதிலிருந்தால் போதுமானது :—

(1) மனுதார் வசிக்கும் கிராமத்தின் பெயர்.

(2) மனுதாரின் பெயர்.

(3) அவருடைய சொத்தின் பட்டா நம்பர்.

(4) கோரப்படும் கடன் தொகை.

(5) எதற்காகக் கடன் தேவை ?

(6) கொடுக்கப்படும் ஜாமீன் விவரம்.

நேர்முகமாக மனுச் செய்து கொண்டால், இந்தத் தகவல்களை அந்த உத்தியோகஸ்தருக்குக் கொடுக்க வேண்டும். அவர் அவற்றைப் பதிந்து கொண்டு மனுதாரிடம் கையொப்பம் வாங்கிக் கொள்ளுவார். ஆகவே, அச்சிட்ட நமூனாக்களை குடியானவர்களுக்கு வழங்க வேண்டிய அவசியமில்லை.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

இடைஞ்சலைக் கொடுத்துக் கொண்டுதானிருக்கின்றன. போர்க்கள மென்றால் அது இல்லாமலிருக்குமா ?

நேச தேசப் படைகளில் ஐந்தாவது சேனையின் முன்னேற்றம் தான் ஆதியில் ரொம்ப மெதுவாக இருந்தது. ஆனால், இப்பொழுதோ அது தான் அசாத்திய வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இதுவும் ஒரு வேடிக்கை தான்.

ஜெர்மானியர் அங்கங்கே உள்ள பாலங்களையும், வீடுகளையும் இடித்துத் தள்ளி விட்டு ஓடுகிறார்களாம். ஆனால், ஐந்து கொல்ல மேஸ்திரிகள் வெகு துரிதமாக அப் பாலங்களை மீண்டும் கட்ட வேலை செய்து கொண்டிருக்கிறார்களாம். இப் பாலங்கள் கட்டி முடிந்ததும், இவற்றின் மீது ஏராளமான படைகள் ஹிட்லரின் படைகளைத் துரத்த வென்று செல்லத் தான் போகின்றன.

போறாத வேளை தான்

இத்தாலி காலியாவதற்கும், இரண்டாவது போர் முனை ஆரம்பமாவதற்கும், கிழக்கே ருஷ்யர்கள் தங்கள் லக வரிசைகளை மீண்டும் கட்டத் தொடங்குவதற்கும் சரியாக இருக்கும் போலிருக்கிறது. வரப் போகிற மாதங்கள் ஜெர்மானியருக்கும், ஹிட்லருக்கும், அவரது பிடியில் சிக்கித் தவிக்கும் நாட்டவருக்கும் ரொம்பப் போறாத வேளையாகவே இருக்கப் போகின்றன.

ருஷ்யாவில் அமெரிக்கருக்கு இடம்

போன வாரம் ஒரு நாள், மத்யதரைக் கடல் பிரதேசத்தி லிருந்து, சில விமானங்கள் கிழக்கு ஜெர்மனியைத் தாக்கச் சென்றன. அங்கிருந்து அப்படியே அவை அனைத்தும், ருஷ்யாவில் உள்ள தொரு விமானக் கூடத்தில் போயிறங்கி விட்டன. இந்தக் கூடம், இனி அமெரிக்கர்களாலேயே உபயோகிக்கப்படுமாம். நேச தேசத்தாரிடை ஒற்றுமை இல்லை என்று சொல்லும் நாஸிப் பிரசாரகர்களுக்கு இச் செய்தி முகத்திலறைந்தது போல் ஆனிருக்கும். கிழக்கு ஜெர்மனி வரை போய், திரும்பவும் மத்ய தரைக் கடல் பிரதேசத்திற்குத் திரும்ப வேண்டு மென்றால், எவ்வளவு தூரமாகிறது. அப்படியே ருஷ்யாவிற்குப் போய் விடுகிறது என்றால், ரொம்ப சௌகரிய மல்லவா ? அங்கிருந்தே இன்னும் கடுமையாகத் தாக்கலாமல்லவா ?

நாஸிகள் கவலை

ருஷ்யர்கள், தெற்கு ருஷ்யாவின் கீழ்ப் பகுதியிலே ஒன்று கூடி, திரும்பவும் தாக்குதல்களை ஆரம்பிக்கக் கூடும் என்று ஜெர்மானியர் பயப்படுகிறாப்போ லிருக்கிறது. ஆகவே, நாஸிகள் இப்பொழுது பல இடங்களில் எதிர்த் தாக்குதல்களை நடத்திப் பார்த்து விட்டார்கள். அனைத்திலும் அவர்களுக்குத் தோல்விதான். ருஷ்யா என்ன செய்யப் போகிறது இனி என்று பார்க்கவேண்டும்.



சிறை மீண்டு தாய் நாட்டிற்குத் திரும்பும் படையினரை அழைத்துக் கொண்டு வந்த உத்தியோகஸ்தர்கள்.

போர் முயற்சியும் அதன் எதிரிகளும்

(பு. செல்வராஜ்.)

இப்போது நடைபெறும் போரில், வெற்றி நமக்கே என்னும் நம்பிக்கையை மக்களுக்கு உண்டாக்குவதே போர் முயற்சியாகும்; தோல்வி மனப்பான்மையை அகற்றி, வெற்றியுடன் போரை விரைவில் முடிப்பதற்காக மக்கள் அனைவரும் தத்தம்மாலியன்ற வகையிலெல்லாம் ஒத்துழைக்குமாறு தூண்டுவதே போர் முயற்சியாகும்.

மக்கள் அனைவரும் போரின் உண்மையான நிலைமையை அறிந்து, நம் நாட்டையும் நம் குடும்பங்களையும் சொத்து சுதந்தரங்களையும் எதிரி அழித்து விடாமலும் பறித்துக் கொள்ளாமலும் பாதுகாக்க முன் வரவேண்டும்.

நம் போர் வீரர்களுக்கு, வேண்டிய உதவிகளை யெல்லாம் நாம் செய்தால் தானே, அவர்கள் வீரமாகப் போரிட்டு, நம் நாட்டின் வட கிழக்கு வாயிற்படியில் காலடி வைத்திருக்கும் எதிரியை அடித்து விரட்ட முடியும்!

ஐந்து வகை எதிரிகள்

ஆனால், தெரிந்தோ தெரியாமலோ இன்று நம் நாட்டில் போர் முயற்சிக்கு எதிரிகளும் இருக்கின்றார்கள். இந்த எதிரிகள் தங்களை அறியாமலே நம் நாட்டுக்கும் நம் மக்களுக்கும் துரோகம் செய்கின்றார்கள். நம்மை எதிரியிடம் காட்டிக் கொடுக்கும் வழிகளைக் கையாளுகின்றார்கள். இவர்கள் யாவர்? இந்த எதிரிகள் 5 வகைப்படுவார்கள்.

1. பொய் வதந்திகளை இரகசியம் என்னும் பேரால் மனங் கூசாமல் பரப்பி, பீதியைக் கிளப்புபவர்கள்.

2. உணவுப் பொருள்களையும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் பிற பொருள்களையும் பதுக்கிச் சேமித்து வைத்து, கொள்ளை இலாபம் அடிக்க முயற்சி செய்பவர்கள்.

3. தாங்களும் வேலை செய்யாமல், பிறரையும் வேலை செய்ய விடாமல் தடைக்கற்களாக இருக்கும் சோம்பேறிகள்.

4. கையிலிருக்கும் காசைக் கண்டபடி செலவு செய்பவர்கள்.

5. நிலங்களையும் தோட்டங்களையும் பயிரிடாமல் வைத்திருப்பவர்கள்.

இத்தகைய எதிரிகளால் போர் முயற்சிக்குப் பாதகம் விளைவதோடு, நாட்டு மக்களுக்குப் பல வகையில் பெருந் தீமைகள் ஏற்பட்டு விடுகின்றன.

சமூகத்திற்கும் நாட்டிற்கும் கேடு

சிலர், மனங் கூசாமல் பொய் பேசி, பீதியைக் கிளப்புகிறார்கள். "எண்டா தம்பி! ஜப்பான்காரன் கல்கத்தாவையெல்லாம் பிடித்துக் கொண்டு டில்லிக்குள் நுழைந்துவிட்டானுமே! ஜெர்மன்காரன் எப்பவோ ரஷ்யாவை ஜெயித்து விட்டான். சும்மாவேனும் பத்திரிகைக்காரன்கள் இன்னும் ரஷ்யா சண்டை போடுகிற தென்றும், ஜெர்மன்காரன்கள் பின் வாங்கி ஓடி வருகின்றன ரென்றும் புளுகுகிறான்கள்; நம்ப அண்டை வீட்டு ஓட்டல்கார ஐயா ரேடியோ கேட்டு இதைச் சொன்னார். எதிர் வீட்டுச் சுப்புவின் [illegible]ர மகனுக்கு அக்கா புருஷன் ஆர்[illegible] வேலை செய்கிறானே அவன் கூட [illegible]த் தான் சொன்னான். ஆர்பரில் [illegible] செய்றவாளுக்கு எல்லாம் தெரியு[illegible]லியோ" என்று ஒருவன் கூறு[illegible]ன். பத்திரிகை படிப்பவர்கள், [illegible] யறிவுள்ளவர்கள், விஷய ஞானம் [illegible]ந்தவர்கள் எவரும் இதனைக் கேட்ட[illegible] இது பொய்ச் செய்தி என்று [illegible]ந்து கொள்வரார்கள்; இதனைக் [illegible]வனைத் திருத்துவார்கள். வேண்டு[illegible]றே இவ்வாறு செய்பவனுயின் [illegible]சாரிடம் அவனைப் பிடித்துக் கொடுப்[illegible]ள். ஏனென்றால் அவன் கூறு[illegible]ப் பாமர மக்கள் நம்பினால், பீதி [illegible]ந்து விடுவார்கள். அதனால் சமூகத்[illegible]ம் நாட்டுக்கும் கேடு விளையும்.

[illegible] நம்பர் எதிரி

[illegible] போன்று போரைப் பற்றிப் பல [illegible]ன விஷயங்களைத் தங்களுக்குத் [illegible]ந்தது போல, அவன் சொன்னான், [illegible]ன் சொன்னான் என்று கூறித் திரி[illegible]கள் சிலர் நம் நாட்டில் இருக்கின்றார் [illegible] மற்றும் சிலர் படித்தவர்களா[illegible]ந்தும், தங்களுக்கு எல்லாம் தெரிந்த[illegible] போன்றும், இராணுவ நடவடிக்கை[illegible]ல் தேர்ச்சி பெற்றவர்கள் போன்றும், [illegible]ணைகளில் உட்கார்ந்து கொண்டு, [illegible]ம் போன போக்கில் நம் வீரர்களின் [illegible]ர்த் திறனைக் குறைத்தும், எதிரிகளைப் [illegible]ந்தும் பேசுகின்றனர்.

[illegible]வர்கள் போர் முயற்சியின் முதல் [illegible]ம்பர் எதிரிகளாயிருப்பதுடன், நாட்டுக் [illegible] பெரும் துரோகிகளாகவும் இருக்கின்[illegible]கள்.

[illegible]ாள்ளை யடிப்பவர்கள்

உணவுப் பொருள்களையும், துணி, மண்ணெண்ணெய், விறகு போன்றவைகளையும், வாழ்க்கைக்குத் தேவைப் படும் பிற முக்கியமான சாமான்களையும் சேமித்துப் பதுக்கி வைத்துக் கொள்பவர்களும் போர் முயற்சிக்கு எதிரிகளே ஆவார்கள்.

அப்போதைக் கப்போது, மக்களுக்குச் சாமான்களை விற்பனை செய்ய இவர்களுக்கு மனம் வருவதில்லை. இவர்கள், கடைத் தெருவில் சாமான்களுக்குக் கிராக்கி ஏற்படுமாறு செய்து, கிராக்கி ஏற்பட்ட வுடனே ஒன்றுக்குப் பத்தாக, நூறாக இலாபம் வைத்து விற்று மக்களிடம் கொள்ளை யடிப்பவர்கள். போரின் மீதும் சர்க்கார் மீதும் பழி போட்டு விட்டுத் தங்கள் மனம் போன போக்கில் இவர்கள் கொள்ளை யடிப்பதால் ஏழை மக்கள் மனம் உடைந்து, மன உறுதி குலைந்து விடுகின்றார்கள்.

இது போலவே, சுயநலப் பெருக்கால் தங்கள் குடும்பங்களுக்கு வேண்டுமென்று அளவு கடந்து உணவுப் பொருள்களையும் மற்றவற்றையும் சேமித்து வைத்துக் கொள்பவர்களும் இதே ரகத்தைச் சேர்ந்தவர்கள் தாம்.

சர்க்கார் இவர்கள் விஷயத்தில் பல கட்டுப்பாடுகளை விதித்தும், மக்களைக் கொள்ளையடிக்கும் புத்தி இவர்களை விட்

டுப்போக வில்லை. எனவே, இப்[illegible] இத்தகையவர்களைக் கைது செய்து, [illegible] தண்டனை விதித்து சர்க்கார் அடக்கி[illegible] கின்றார்கள்.

"படித்திருக்கிறோம் வேலை இ[illegible] வில்லையே!" என்பாரும், "[illegible] வில்லை; உடற் கட்டிருக்கிறது; பி[illegible] புக்குத் தான் வழியில்லை" எ[illegible] சொல்லித் திரிபவர்களும் போர் [illegible] சிக்கு மற்றொருவித எதிரிகளாவர்.

பூமிக்குப் பாரம்; சோற்றிற்குக் கேடு

போர் நடக்கும் இந்தக் காலத்[illegible] எல்லா வகையாருக்கும் வேலை [illegible] கிறது. எந்த வேலையும் தெரியா[illegible] களுக்குக் கூட சர்க்கார் தன் செ[illegible] வேலை கற்பித்துக் கொடுத்து, வே[illegible] கொடுத்து வருகிறது. இராணுவ[illegible] சேரலாம்; தொழிற் சாலைகளிற் [illegible] லாம்; கடற் படை, விமானப் [illegible] தொழிலாளர் படை, ஸப்ளைப் [illegible] போன்றவைகளில் எவ்வளவோ [illegible] கள் இருக்கின்றன. ஆனால் வேலையில்லை என்று சொல்லிக் கொண்டு திரிபவர்கள் தாங்களும் இவற்றில் சேர்ந்து வேலை தேடிக் கொள்வதில்லை; வந்து சேர ஆசைப்படுபவர்களையும் சில சமயங்களில் பொய்க் கதைகளைக் கூறி மிரட்டித் தடை [illegible]ய்து விடுகின்றனர். இத்தகையவர்கள் [illegible]க்குப் பாரமாகவும் சோற்றுக்குக் [illegible]ாகவுமே இருக்கின்றார்கள்.

[illegible]ரு நஷ்டம் அடைவார்கள்

[illegible]கையிலிருக்கும் காசைக் கண்டபடி [illegible]ன செலவு செய்பவர்களும் போர் [illegible]ற்சிக்கு எதிரிகளே ஆவார்கள். [illegible]ர்க் காலத்தில் எல்லாப் பொருள் [illegible]ன் விலைவாசிகளும் ஒன்றுக்குப் பத் [illegible]க்ப் பெருகியிருப்பது இயற்கை. இத்தகைய சமயத்தில், அத்தியாவசியமான சாமான்களைத் தவிர, வேறு எதனையும் வாங்குவது புத்திசாலித் தனமல்ல. தங்கம்—வெள்ளி நகைகளையோ, செம்பு—பித்தளை சாமான்களையோ, அதிகப்படியான உடுப்புக்களையோ, அலங்காரப் பொருள்களையோ அல்லது வீடு—நிலம் போன்றவைகளையோ வாங்கி வைத்துக் கொள்வது தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வதாகும். ஏனெனின், போர் முடிந்த பிறகு, இப் பொருள்களின் விலை வாசிகள் திடீரென்று விழுந்து விடும், அப்போது இத்தகையவர்கள் பெரு நஷ்டம் அடைந்து விடுவார்கள்.

உணவுப் பொருள்களையோ, பிறவற்றையோ சிக்கனமாக வைத்தில்லாமல் பாழ்ப்படுத்துகிறவர்களும் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களே. பல வகை உணவுகள் தயாரித்து மீதியாகுமாறு செய்து பாழாக்குதல், முக்கியமான காரியங்களுக்கே காகிதம் கிடைக்காமல் கஷ்டப்படும் போது, அவசியமில்லாத காரியங்களுக்கெல்லாம் பெரிய பெரிய காகிதங்களை உபயோகித்துப் பாழாக்குதல், மண்ணெண்ணெயை மனம் போனபடி உபயோகித்து இரவெல்லாம் இஷ்டப்படி விளக்கெரியச் செய்து விட்டு, மண்ணெண்ணெய் கிடைக்க வில்லையே என்று கூறுதல், சிக்கனமாக விறகைப் பயன்படுத்தி அடுப்பெரிக்காமல் மனம் போனபடி எரித்து விறகு கிடைக்க வில்லையே என்று கூப்பாடு போடுதல், ஆகிய செயல்களைப் புரிபவர்களும் போர் முயற்சியின் எதிரிகளே ஆவார்கள். இவர்களுடைய செயலால் சமூகத்துக்கும் நாட்டுக்கும் பெருந் தீமையே விளையும்.

பிரயாணத்தைக் குறைக்க

ரயில் வண்டிகளோ, மோட்டார் பஸ்களோ போதிய அளவு கிடைக்காத காலத்தில், கல்யாண மென்றும் திருவிழா வென்றும் அதுவென்றும் இதுவென்றும் கூறிக் கொண்டு அடிக்கடி பிரயாணம் செய்பவர்களும் இந்த ரகத்தைச் சேர்ந்த எதிரிகளே ஆவார்கள். இவர்களால், மிக்க முக்கியமான காரியங்களை உத்தேசித்துச் செல்லும் மக்களின் பிரயாண வசதி குறைவதுடன், போர் முயற்சிக்கும் தடை ஏற்பட்டு விடுகின்றது. இவர்கள் இவ்வாறு பிரயாணம் செய்வதை விடத் தங்கள் பிரயாணச் செலவுக்காகும் பணத்தைத் திருமணத் தம்பதிகளுக்குப் பரிசாக அனுப்பி விடலாம். மற்றவற்றிற்குப் போகாமலே பணத்தை மிச்சப்படுத்தலாம்.

சாகுபடியை அதிகப்படுத்துக!

நிலங்கள் வைத்திருப்பவர்களும் வீடுகளில் தோட்டங்கள் வைத்துக் கொண்டிருப்பவர்களும் அவற்றைச் சும்மா போட்டு வைத்துக் கொண்டிருப்பார்களானால், இவர்களும் போர் முயற்சிக்கு எதிரிகளே யாவார்கள். இவர்கள் தங்களிட மிருக்கும் நிலங்களில் பயிர் விளையச் செய்யலாம். பயிர் விளைய முடியாத நிலங்களில் காய்கறிகளை உற்பத்தி செய்யலாம். இவ்வாறு செய்வதால் நாட்டில் உணவுப் பஞ்சமோ காய் கறி கிராக்கியோ ஏற்படாதபடி தடுக்கலாம். இவ்வாறின்றிச் சும்மா வைத் திருப்பவர்கள் நாட்டில் பஞ்சம் ஏற்பட உதவி செய்பவர்களாவதுடன், இதன் மூலம் மனித சமூகத்துக்கும் நாட்டுக்கும் துரோகம் செய்தவர்களாகின்றார்கள்.

எனவே, மேற்கண்ட வகையினர் அனைவரும் போர் முயற்சிக்கு எதிரிகளாயிருப்பதோடு மட்டுமின்றி, நம் நாட்டு மக்களுக்குத் துன்பம் ஏற்படச் செய்து, அதனால் நாட்டுக்கே இன்னல் விளைத்தவர்கள் ஆகிவிடுகின்றார்கள்.

பொதுமக்கள் கடமை என்ன?

ஆகவே பொது மக்கள் இத்தகையவர்களுடைய பேச்சையோ, செயல்களையோ கண்டு ஏமாறக் கூடாது. அதற்குப் பதிலாக, இவர் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் தவறுகளை எடுத்துக் காட்டி இவர்களை திருத்தவே பொது மக்கள் முயலுதல் வேண்டும். திருந்தாமல் பிடிவாதமாகத் தவறு செய்பவர்களை அதிகாரிகளிடம் காட்டிக் கொடுத்து, அவர்களால் மனித சமூகத்துக்கும் நாட்டுக்கும் தீமை ஏற்படாமல் காக்க வேண்டும்.

நம் நாட்டில் நாம் அனைவரும் போர் முயற்சியில் ஈடு பட்டு, நம்நாட்டு வாயிற்படியில் கால் வைத்து விட்ட எதிரியைத் துரத்தி யடிக்குமாறு நம் வீரர்களுக்கு உதவி செய்து, அதே சமயத்தில் நாம் அனைவரும் மன உறுதியுடன் இருந்து, போர் முயற்சி வெற்றியில் முடியுமாறு ஒத்துழைத்தால் தான், நம் நாடும் நம் மக்களும் எதிரியின் அட்டூழியக் கொடுமைக்கு ஆளாகாமல் தப்பலாம்.

அதை விட்டு, நம் அழகிய நகரங்களையும், வீடு வாசல்களையும், பெண்டு பிள்ளைகளையும் எதிரி அழித்து விடுவதற்கு நாம் உடந்தையாகவா இருப்பது? அப்படியிருந்தால் அது எவ்வளவு கேவலமான துரோகச் செயல்? நம் தலையில் நாமே மண்ணை வாரிக் கொட்டிக் கொள்வதா?

இரகசியம் என்று சொல்லிப் பொய் வதந்திகளையும், பீதி உண்டாக்கும் விஷயங்களையும் பரப்புபவர்களை உடனுக்குடன் அடக்கி விட வேண்டும், உங்களால் முடியாவிட்டால் அதிகாரிகளிடம் அவர்களைப் பற்றித் தெரிவித்து விட வேண்டும்.

அளவுக் கதிகமான சாமான்களைப் பதுக்கி வைத்துக் கொண்டு, கொள்ளை இலாபம் அடிக்க முயலும் வியாபாரிகளையும், சுய நலத்தை உத்தேசித்துப் பதுக்கி வைத்துக் கொள்பவர்களையும் உடனுக்குடன் அதிகாரிகளுக்கு அறிவிப்பதன் மூலம் அடக்கி விட வேண்டும்.

தேசீய சேமிப்பு நிதி

சோம்பேறிகளுக்கு அறிவு கொளுத்தி தைரிய மூட்டி, ஏதேனும் ஒரு வேலையை மேற்கொள்ளுமாறு செய்தல் வேண்டும்.

ரயில் பிரயாணத்திலும், மோட்டார் பிரயாணத்திலும், அவசியமில்லா ஆடம்பரப் பொருள்களிலும், தங்கம்-வெள்ளி போன்றவைகளிலும் பணத்தைச் செலவிட்டுப் பாழாக்காமல், ஸர்க்கார் கடன் பத்திரங்கள், தேசீய சேமிப்பு நிதி போன்றவைகளில் பணத்தை முதலீடாகப் போட்டுப் பின்னால் நல்ல இலாபம் பெற முயற்சித்தல் வேண்டும்.

நிலம் வைத்திருப்பவர்கள் குறைந்த பக்ஷம் காய் கறிகளையேனும் பயிரிட்டுத் தங்கள் வரையில் உபயோகித்துக் கொண்டாவது காசை மிச்சப்படுத்தி, கிராக்கியைக் குறைக்க வேண்டும்.

பொதுவாக வாழ்க்கையின் செலவுகளை சிக்கனப் படுத்தி, ஆடம்பரச் செலவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும். உங்களுக்குத் தேவை யில்லை என்று தோன்றும் உடைந்த கண்ணாடி, மரச் சாமான், தகர டப்பிகள், இரும்புச் சாமான்கள், கிழிந்த காகிதங்கள், கந்தைகள் ஆகிய எந்தப் பொருளையும் சேமித்து வைத்து யுத்தக் கமிட்டிக்கு அனுப்பி வைக்க வேண்டுமே ஒழிய, இவை தேவை யில்லை எனக்கருதித் தூக்கி எறிந்துவிடக்கூடாது.

உங்களிட மிருக்கும் பழைய கதைப் புத்தகங்கள், மாசிகைகள் முதலிய வற்றை நம் தாய்நாட்டு வீரர்களுக்கு அனுப்பி உதவ வேண்டும். பண மிருப்பவர்கள் போருக்குப் பண உதவி செய்தல் வேண்டும். பண மில்லாதவர்கள் படையில் சேர்ந்தும், போர் சம்பந்தமான பிற எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டும் ஒத்துழைக்க வேண்டும். ஒன்றும் முடியாதவர்கள் எந்த வகையிலும் போர் முயற்சிக்குக் குந்தகம் செய்யாமல் இருத்தல் வேண்டும்.

[சமீபத்தில் சென்னை அகில வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட பேச்சு.]

வந்தே விட்டது

ஜெர்மானியர் மட்டுமின்றி, உலகோரனைவருமே ஆவலோடு எதிர்பார்த்திருந்த இரண்டாவது போர் முனை மேற்கு ஐரோப்பாவில் ஆரம்பமாகிவிட்டது. இந்தச் செய்தி சென்ற செவ்வாய்க்கிழமை யன்று உலகெங்கும் பரவி விட்டது. அன்று அதி காலையில், பிரான்ஸ் தேசத்திலே, உள்ள ஸீன் நதியின் முகத்துவாரத்திற்கும், நார்மண்டி என்ற பிரதேசத்திற்கும் இடையிலுள்ள இடங்களில் நேச தேசப் பாரசூட் படைகள் வந்திறக்கப்பட்டன. லாஹாவ்ரே என்ற துறைமுகம் தாக்கப்பட்டது. அதே சமயம் ஏராளமான யுத்தக் கப்பல்களும், சாமான்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களும், துருப் பேற்றிச் செல்லும் கப்பல்களும் பிரஞ்சுக் கரை யருகே தென்பட்டன. கலே டங்கர்க் என்ற துறைமுகங்கள் மீது பிரமாதமான விமானத் தாக்குதல் நடந்திருக்கிறது. அன்று காலையில் நேச தேசப் படைத் தலைவரது கார்யாலயத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி ரேடியோ மூலம் மேற்கு ஐரோப்பாவில் உள்ளவர்களுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார். அங்கே கடற் கரையிலிருந்து 22 மைல்களுக் குட்பட்ட பிரதேசங்களில் வசிப்பவர்கள் கவனிக்க வேண்டிய எச்சரிக்கை அது. நேசப் படைகள் வந்திறங்கிக் கொண்டிருப்பதாகவும், பலமான விமானத் தாக்குதல்கள் இனி நடக்கு மென்றும், ஒவ்வொரு தாக்குதலுக்கும் ஒரு மணி முன்பாக துண்டுப் பிரசுரங்கள் விமானங்களிலிருந்து வீசப்படும் என்றும், அது கண்டதும் அந்தந்த இடங்களிலுள்ளவர்கள், தம் வீடு வாசல், ஆஸ்தி, பூஸ்திதிகளை மறந்து, திறந்த வெளியில் போய் கூட்டமாக இல்லாமல் பிரிந்திருக்க வேண்டு மென்றும் அந்த எச்சரிக்கை கூறிற்று.

நேச தேசப் படைகள் இறங்க வருவதை ஜெர்மன் கடற் படை எதிர்த்ததாம். முதலில் சமுத்திரக் கரையி லிருந்து 12 மைல் தூரத்தில் போயிறங்கிய பாரசூட் படைகளுக்கு, கடல் மூலமாகப் பிரமாதமான உதவிகள் போயிறங்கிவிட்டனவாம்.

அடுத்த லட்சியம் பெர்லின்

மன்னர்பிரான், ஐஸன்ஹோவர், டிகால் ஆகியோரெல்லாம் நேச தேசத்தார் இரண்டாவது போர் முனையைத் தொடங்கிய அன்றிரவு வெகு உத்சாகத்தோடு ரேடியோவில் பிரசங்கம் செய்தார்கள். ஒவ்வொருவரும் ஐரோப்பிய மக்களை எச்சரித்தார்கள். உலகத்திலே சமாதானம் நிலவ எடுக்கப்படும் இந்த சரித்திரப் பிரசித்தமான நடவடிக்கைகளினால், ஐரோப்பிய மக்களில் பலர் உயிரிழக்கவும், பலர் பல கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகவும், பல நகரங்கள் பாழாகவும் நேரிடக்கூடும். அதற்காகத் தாங்கள் வருந்துவதாகவும், ஆனால் இவை தவிர்க்க முடியாத சம்பவங்கள் என்பதையும் எடுத்துக் கூறி, நேச தேசப் படையெடுப்பிற்கு அனைவரும் ஆதரவளித்தால், ஹிட்லரின் கொட்டத்தைச் சீக்கிரமே அடக்கி, யுத்தத்தையும் விரைவில் முடிக்கக் கூடும் என்றும் தெரிவித்தார்கள். அதோடு, பல பயங்கரமான போர்கள் இனி நடக்கக் கூடுமென்பதையும், அச்சு நாடுகளின் தலைநகர்களில் ரோமாபுரி நேச தேசத்தினர் வசமாகி விட்டதால், பாக்கி யுள்ள இரண்டில் பெர்லின் நகரை அடைவதே நமது லக்ஷியம் என்பதையும், ஆனால், அதைக் கைப்பற்று முன் எத்தனையோ இடைஞ்சல்கள் குறுக்கிடக் கூடு மென்றும், ஆனால் எத்தகைய இடைஞ்சலானாலும் சமாளித்துக் கொண்டு, இறுதியில் வெற்றி பெற அற்புதமான திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன என்றும், கடவுள் அநுக்கிரகத்தால் எல்லாம் சுபமாகவே நடந்து வருகிறது என்றும் அவர்கள் கூறினார்கள்.

ரோமாபுரி வீழ்ச்சி

இதிலொரு ஆச்சரியமான சமாசாரம் பாருங்கள். திங்கட்கிழமை இரவு தான் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ரேடியோ மூலம் ரோமாபுரியின் வீழ்ச்சி பற்றி பேசினார். இறுதி வெற்றி இன்னமும் தூரத்திலேயே இருக்கிறதென்றாரவர். ரோமாபுரியை ஜெர்மானியர் அழிக்காது விட்டுச் சென்றதைக் குறித்து அவர்களைப் பாராட்ட வேண்டிய அவசியமில்லை என்றார். நேச தேச ராணுவ அதிகாரிகளின் சாமர்த்தியமான நடவடிக்கைகளின் பலனை, ஜெர்மானியர் தலை தப்பி ஓட வேண்டி வந்தது என்பதையும், ரோமாபுரியை விடாது கைப்பற்றி யிருக்க வேண்டு மென ஜெர்மானியர் நினைத்திருந்தால், இத்தாலியில் உள்ள நாஸி சைனியம் பூறவுமே அழிந்திருக்கும் என்பதையும் அவர் எடுத்துக் காட்டினார். நேச தேசப் படைகள் சீமையிலே இரண்டாவது போர் முனையைத் துவக்க அதி ஆயத்தமாக இருக்கும் இந்தச் சமயத்திலே, ரோமாபுரி வீழ்ச்சிச் செய்தி ஒரு மகத்தான செய்தியாகும் என்றார். அதற்கு மறு நாள் காலையிலேயே படை யெடுப்பு ஆரம்பமானது ஆச்சரியப் படக் கூடிய செய்தி அல்லவா?

ஏற்கெனவே விழி பிதுங்க நிற்கும் ஜெர்மானியர்பாடு இனி இன்னும் மோசமாகப் போகிறது. கூடிய சீக்கிரமே, நாட்கணக்கிற் குள்ளாகவே ருஷ்யப் படையெடுப்பும் ஆரம்ப மாகலாம். மத்தளத்திற்கு ஒரு புறம் தான் அடி, இந்த மதிகெட்ட ஹிட்லரின் பிடியி லகப்பட்ட ஐரோப்பாவிற்கு எல்லாப் புறங்களிலும் அடி விழப் போகிறது.

நாஜிகளைக் கிழித்து எறியும்

இந்த இரண்டாவது போர் முனை ஜூன், ஜூலை மாதங்களில் ஆரம்பமாகக் கூடும் என்று குத்து மதிப்பாக அமெரிக்க ஜனாதிபதி நாலைந்து தினங்களுக்கு முன் தான் கூறினார். அவருக்கே தெரிந்திருக்கும் அந்தப் படை யெடுப்பு இப்பொழுதே ஆரம்பமாகும் என்று. ஆனாலும் முன் கூட்டி பத்திரிகைக் காரர்களுக்கு அதை அப்பட்டமாகச் சொல்லி விடக் கூடாது என்று நினைத்தார் போலிருக்கிறது அவர். அதோடு, யாரோ ஒரு பெண் நிரூபர் செய்த பிசகால், அசல் படை யெடுப்பிற்கு ஓரிரு தினங்களுக்கு முன்பாக, படை யெடுப்பு ஆரம்பமாகி விட்டது என்ற செய்தி அமெரிக்காவிலே பறந்ததாம். அது புலி வருகிறது என்ற கதையாகவே ஆயிற்று. அசல் புலி வந்தே விட்டது. இனி அது ஐரோப்பாவில் உள்ள நாஸி ஆதிக்கத்தைக் கிழித்து எறியத் தான் போகிறது.

உலகமே பிரமிக்கிறது

என்ன கணக்கு! என்ன கணக்கு! என்ன திட்டம்! என்று உலகமே பிரமிக்கிறது. போன மாதமே அமெரிக்காவில் படை யெடுப்பிற்கான படகுகள் தேவைக்கும் அதிகமாகத் தயாரிக்கப் பட்டு விட்டனவாம். ரோமாபுரி வீழ்ந்த இரண்டு தினங்களுக் குள்ளாகவே படையெடுப்பு ஆரம்பமாகி விட்டது. செர்பரோ என்ற நகரைப் பிடிக்க நேச தேசத்தார் முயலுவதாக ஜெர்மன் ரேடியோ கூறிற்று. சுமார் 75 மைல் நீளமுள்ள பிரதேசங்களில் பிரமாண்டமான படைகள், வேண்டிய ஆயுதங்களுடன் சென்றிறங்கின. பிரஞ்சுக் கரை ரொம்ப மோசமான தாகும். பாறைகள் நிறைந்த பிரதேசமாகும். ஆனாலும் சீமையிலிருந்து அது ரொம்பப் பக்கத்தி லிருக்கிறது. விமான மூலமாகவே ஆயுதங்களையும், ஆட்களையும் கொணர்ந்து கொட்டி விடலாம். இரவோடு இரவாக எத்தனையோ அற்புதங்களைச் சாதிக்கலாம்.

இனித் தான் உலகம் அறியும்

ஐஸன்ஹோவர் ஒரு சூரர். பலஹீனமான பகுதியைத் தாக்காமல், ஜெர்மானியர் பலமாகப் பாதுகாப்புகளை அமைத்துள்ள பிரதேசத்தையே தாக்கி யிருக்கிறார். இதிலிருந்து, அவருக்கு நேச தேசப் படை பலத்தின் மீதுள்ள நம்பிக்கை தெரியவில்லையா? பிரான்ஸை முதலில் விடுவிக்க வேண்டும் என்ற கொள்கையோடு, பிரஞ்சுக் கரையிலே நேச தேசப் படைகள் இறங்கி யிருக்கின்றன. நேச தேசத்தார் இத்தனை வருஷங்களாகச் செய்து கொண்டிருந்த ஏற்பாடுகள் இன்னின்ன என்பதை இனித் தான் உலகம் அறியப் போகிறது.

இந்தப் படை யெடுப்பைத் தாங்கும் படைகளுக்குத் தலைவராகத் தன்னை ஆக்கிக் கொண்டிருக்கிறாராம் ஹிட்லர். இதுவே அவருக்குக் கடைசிப் போராக இருக்குமல்லவா? ஆகவே, பாவம்! தனது ஆசையைத் தீர்த்துக் கொள்ளட்டுமே அவர். இனி நடக்கப் போகும் அற்புதங்களைக் கவனித்து வருவோம்.

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

மே 31.—ஜெர்மன் விமானங்கள் கிழக்கு இங்கிலாந்தின் சில பகுதிகளில் வெடிகுண்டுகள் வீசின.

நேச தேச விமானங்கள் ஜெர்மனியிலுள்ள ஹேம், ஆஸ்னுப்ராக், ஸ்க்வெர்ட்டி முதலிய இடங்களைத் தாக்கின.

ஜூன் 2.—லீவர்குஸன்மீது நேச தேச வெடி குண்டு விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன.

ஜூன் 3.—நேச விமானங்கள் லட்விக்ஷாபனைத் தாக்கின.

ஜூன் 4.—பிரிட்டிஷ் விமான உற்பத்தியைப்பற்றி ஸர் ஸ்டாப்போர்ட் கிரிப்ஸ் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

ஐக்கிய அமெரிக்காவும், அட்லாண்டிக் பிரதேசமும்.

மே 31.—சீன ராணுவ தூது கோஷ்டியின் தலைவர் ஜெனரல் ஷாங் சென், ஜனாதிபதி ரூஸ்வெல்டை சந்தித்துப் பேசினார்.

ஜூன் 1.—அமெரிக்காவின் யுத்தக் காரியதரிசி மிஸ்டர் ஹென்ரி ஸ்டிம்ஸன் யுத்த நிலைபற்றிப் பேசினார்.

ஜூன் 2.—அமெரிக்கா நேச தேசங்களுக்கு இதுவரை கடன் குத்தகைத் திட்டப்படி 2,422½ கோடி டாலர் பொருள் உதவி யிருக்கிறது.

ஜூன் 5.—ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டை ஆஸ்திரேலிய பிரதம மந்திரி மிஸ்டர் ஜான் கர்ட்டின் கண்டு பேசினார்.

இந்தியா, பர்மா, ஸிலோன்.

மே 31.—சீன-அமெரிக்கப் படைகள் மிட்கியானாவின் மீது மேற்கொண்டு தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஜூன் 1.—சீன-அமெரிக்கப் படைகள் மலக்காங்கைப் பிடித்தன. பிஷெண்பூர் பிரதேசத்தில் ஒரு கிராமம் கைப்பற்றப் பட்டது.

ஜூன் 2.—மிட்கியானாவில் பாதி, நேசத் துருப்புகள் வசம் வந்துவிட்டது.

ஜூன் 3.—மிட்கியானா ரயில்வே ஸ்டேஷனை மீண்டும் கைப்பற்றுவதற்காக நேசப் படைகள் முயலுகின்றன.

ஜூன் 4.—பிஷெண்பூர் பிரதேசத்தில் பீரங்கி மலையிலிருந்து ஜப்பானியர் வாபசாயினர்.

ஜூன் 5.—சீனப் படைகள் டம்போங்காவைப் பிடித்தன. மிட்கியானாவில் கடும் போர் நடக்கின்றது.

ரஷ்யாவும், பின்லாந்தும்.

மே 31.—ஜாவிக்கு வடக்கே ஜெர்மானியர் ரஷ்யர்களைத் தாக்கினர்.

ஜூன் 1.—ஜாஸிப் பிரதேசத்தில் ஜெர்மானியரின் எதிர் தாக்குதல்கள் தொடர்ந்து நடக்கின்றன.

ஜூன் 2.—ரஷ்ய விமானப்படை 37 ஜெர்மன் விமானங்களைச் சுட்டு வீழ்த்தின.

ஜூன் 3.—ஜாஸிக்கு வடக்கிலும், வடமேற்கிலும் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களைத் தாக்கியது பயனின்றிப் போயிற்று.

இத்தாலி முதலியன

மே 31.—நேசப் படைகள் **பவுடனு, ஸ்டராங்கலோ கல்லியைப்** பிடித்தன.

ஜூன் 1.—நேசப் படைகள் **ப்ராஸினோன், ஸோரா, ரிபி, டார்ரிஸ்** இவற்றைக் கைப்பற்றின.

ஜூன் 2.—நேசத் துருப்புகள் **வால் மன்டோன், வெல்லட்ரியைக்** கைப்பற்றின.

ஜூன் 3.—ஐந்தாம் படையினர் எதிரியின் ஆல்பன் மலையரண்களைத் துளைத்து விட்டனர். ஆருவது ரஸ்தாவில், 5-வது 8-வது படையினர் ஒன்று கூடிவிட்டனர்.

ஜூன் 4.—ரோமாபுரிக்குள் நேசப் படைகள் புகுந்து விட்டன. **அலட்ரி, அனக்னி** முதலிய இடங்களையும் நேசத் துருப்புகள் தம் வசமாக்கிக் கொண்டன.

ஜூன் 5.—**ரோமாபுரி வீழ்ந்தது. இத்தாலிய மன்னர் முடி துறந்தார்.** அதிகாரத்தை தன் குமரன் இளவரசர் உம்பர்ட்டோவுக்கு மாற்றிவிட்டார்.

விஷி, சுதந்திர பிரான்சு முதலியன

மே 31—ஸின் நதிப்பாலங்களும், ப்ளோஸ்டி எண்ணைக் கிடங்குகளும் நேச விமானங்களால் தாக்கப்பட்டன.

ஜூன் 3.—பாஸ்டி கலே பிரதேசத்திலுள்ள ராணுவ இலக்குகளை நேசப் படைகள் தாக்கின.

தூரக் கிழக்கு நாடுகள்.

மே 31.—குரைல் தீவுகளான **ஹிமுஷிரு, பரமுஷிரு** முதலிய தீவுகளை நேச விமானங்கள் தாக்கின.

ஜூன் 1.—குரைல் தீவுகள் இன்றும் நேச விமானங்களால் தாக்கப்பட்டன.

ஜூன் 2.—நேச விமானங்கள் குவாம், ட்ருக், வேக், போனேபே, மார்ஷல் தீவுகளைத் தாக்கின.

ஜூன் 4.—நேசப் படைகள் ஒவி, ஒந்தித் தீவுகளில் புகுந்துவிட்டன.

ஜூன் 5.—பஸிபிக் பிரதேசத்தில் 16 ஜப்பானியக் கப்பல்களை, அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்திருப்பதாக ஒரு அமெரிக்க அறிக்கை தெரிவிக்கிறது.

இந்திய கப்பற் படைப் பரீட்சை

இந்திய கப்பற் படை நுழைவுப் போட்டிப் பரீட்சை யொன்று 1944-ம் வருஷம் அக்டோபர் மாதம் 9-ம் தேதி திங்கட்கிழமையும் அதற்கு அடுத்த நாட்களிலும் டில்லியில் நடைபெறும். இந்தப் பரீட்சை, 'பெடரல் பப்ளிக் கமிஷன்'காரர்கள் நடத்துகிறார்கள்.

இந்தப் பரீட்சையில் தேறுகிறவர்களில் ஒருவர் கப்பற் படையின் நிர்வாகப் பகுதியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்.

இந்தியக் கப்பற் படைப் பரீட்சைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் அபேட்சகர்கள் 1925-ம் வருஷம் மே மாதம் 2-ம் தேதிக்கு முன்பு பிறந்தவரா யிருக்கப் படாது; 1927-ம் வருஷம் மே மாதம் 1-ம் தேதிக்குப் பிறகு பிறந்தவர்களாகவுமிருக்கப்படாது. இந்த வயதுக் கட்டுப்பாடுகள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தளர்த்தப் படமாட்டா.

மனுக்கள் எப்படி செய்து கொள்ளப் பட வேண்டு மென்பது பற்றிய விவரங்களில் குறிப்பிடப் பட்டிருப்பது போல, அவசியமான தஸ்தாவேஜிகள் சகிதம் மனு நமூனாவைப் பூர்த்தி செய்து பெடரல் பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு இப் பரீட்சைக்கு ஆஜராக விரும்பும் அபேட்சகர்கள் அனுப்ப வேண்டும். விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரிகளுக்கு 1944-ம் வருஷம் ஜூலை மாதம் 3-ம் தேதிக்கு முன்னதாகவே கிடைக்கத் தக்கபடி அனுப்பப் படவேண்டும். விதிகள், மனு நமூனா முதலிய பிரதிகள் சிம்லா 'பெடரல் ப்பளிக் செர்விஸ் கமிஷன்' காரியதரிசி யிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு குறிப்பிட்ட தேதியில் மனு நமூனா சப்ளை செய்யப்பட்டது என்னும் காரணமாக, மனு தாமதித்து அனுப்ப நேர்ந்தது என்னும் புகல், ஒப்புக் கொள்ள முடியாதது. கடைசி தேதி வரை, மனு நமூனாக்கள் வேண்டு மென்று கோரிக் கொள்ளத் தாமதிப்பார்களானல், பாதகம் அவர்களுக்குத் தான்.

இந்தியக் கப்பற் படையில் பயிற்சி பெறுவதற்கு ஏறக்குறைய 260 பவுன் செலவாகும்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.